
மாத இதழ்



# சமய மஞ்சரி

# வணக்கம்!

அருள் செய்வதில் முதல்வர் பிள்ளையார். குழந்தையாக இருந் தாலும் ஆதி முதலின் தோற்றம்!

கீதை தந்த கண்ணன் அறிதுயில் கொள்ளும் பரந்தாமன். காத்தற் கடவுள். பரம்பொருளின் அம்சம்!

பிள்ளையாரும் பெருமாளும் செய்த அருள் நோக்கின் விளைவு தான் ''சமய மஞ்சரி''

எல்லோர்க்கும் எப்போதும் இவர்கள் அருள் கிடைக்கப் பிரார்த் திக்கிறோம்.

ஒரு பரம்பொருள் நம்மை வழி நடத்துகிறது என்ற நினைவு இருந் தால் ஆன்மிகம் வளரும். மனிதப் பிறவியின் நோக்கம் விளங்கும். தேவையற்ற கவலைகளும் ஆசைகளும் விலகிப் போகும். நெஞ்சில் இன்பமும், அமைதியும், நிறைவும் நிலைக்கும்.

ஆன்மிகம் வளரும் போதுதான் பண்பாடும், ஒழுக்கமும், நீதியும் சிறக்கின்றன.

''சமய மஞ்சரி'' க்கு ஒரு தெளிவான நோக்கு உண்டு.

வாசிப்பது மனிதனின் அறிவை வளர்ப்பதோடு மனத்தைப் பண் படுத்தவும் வேண்டும்.

கற்பவை கற்க — கற்றபின் அதற்குத் தக நிற்கும் பக்குவம் வரும். ''வாலறிவன் நற்றாள் தொழும்'' பண்பு வளரும்.

பெரிய நூல்களைப் படிக்க இப்போதெல்லாம் பலருக்கு நேரம் இருப்பதில்லை. பல பழைய நல்ல நூல்கள் இப்போது எளிதில் கிடைப் பதும் இல்லை. புதிய புத்தகங்களும் சஞ்சிகைகளுமோ பெருத்த விலை யாய் உள்ளன.

தயிரில் இருந்து வெண்ணெய் எடுப்பது போலவும், மலரில் இருந்து வண்டு தேன் சேகரிப்பது போலவும் ''சத்'' தான கருத்துக்களைத் தேடித் தொகுத்துத் தருவதோடு பல புதிய படைப்புக்களையும் வெளி யிடுவது ''சமய மஞ்சரி'' யின் நோக்கம்.

கருத்துக்கு விருந்தாகவும், படிக்கச் சுவையாகவும், குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் பயன் தரக்கூடிய முறையிலும் ஆன்மிகம் வளர்க் கும் ஒரு சஞ்சிகையை மலிவான விலையில் வெளியிட வேண்டும் என்ற எண்ணத்தின் வெளிப்பாடுதான் ''சமய மஞ்சரி''!

படித்துப் பாருங்கள். உங்கள் கருத்துக்களை எழுதுங்கள்.

ஆசிரியர்: சு. குமாரசாமி B, Sc., Dip in Ed.

விலை ரூபா 15/=

# இது ஒன்றுதான் வழி! இளமையில் படியுங்கள்

— சுவாமி சின்மயானந்தா

வயதான பிறகுதான் வேதாந்த நூல்களைப் படிப்பது என்று வைத்துக் கொள்ள வேண்டாம்.

பார்வையும் — அறிவுக் கூர்மையும் மழுங்கி உடலில் சோர்வு கண்ட பிறகு ஆர்வம் இருக்காது.

இளமைப் பருவமே அதற்கு உகந்தது.

வேதாந்த நூல்களை ஏராளமான அளவில் ஒரே சமயத்தில் படிக்க முடியாது, படிக்கவும் கூடாது.

பாலில் உறையிட்டுத் தயிராக்குவதைப் போலக் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் படிக்க வேண்டும்.

ஒரு நாளைக்கு ஐந்து முதல் பத்து பக்கங்கள் வரையில்தான் படிப்பது உசிதம்.

படித்துக் கொண்டே வரும் போது சந்தேகங்கள் உண்டாகும்.

அவை அடிப்படையான சந்தேகங்களாகவே இருக்கலாம்; பரவாயில்லை.

அவற்றைத் தனியாக குறித்துக் கொண்டு தொடர்ந்து படியுங்கள்.

உண்டான சந்தேகங்களைப் பற்றி மேலும் நினைத்துக் கொண்டிருக்க வேண்டாம்.

ஒரு வாரம் படித்து முடித்த பிறகு, அந்தக் குறிப்புக்களைப் புரட்டிப் பாருங்கள்!

ஆச்சரியமாக இருக்கும்!

அவற்றில் அநேக சந்தேகங்களுக்கு உங்களுக்கே விடை இப்போது தெரிந்திருக்கும்.

இந்த ஒரு வாரத்தில் உங்களுடைய மனப்பார்வை விசாலமாக ஆகிவிட்டது.

அறிவுக்கு ஆழம் கிடைத்து விட்டது.

புத்தகத்தைப் படித்து முடிக்கும் போது, அநேகமாக உங்கள் சந்தேகங்கள் அனைத்துமே தெளிந்து போயிருக்கும்.

இளமையிலேயே படியுங்கள்.

மெதுவாகப் படித்துப் புரிந்து கொள்ள அப்போதுதான் நிறைய அவகாசம் இருக்கும்.

வயது ஆக ஆக உடலில் முதிர்ச்சி ஏற்படுவதைப் போல், உங்கள் மனமும் கனிந்து பக்குவமாகி விடும்.

வாழ்க்கையில் முழு வளர்ச்சி பெற இது தான் வழி!

இது ஒன்றுதான் வழி! O

# நாவலர் பெருமான்

சென்ற நூற்றாண்டில் அழிந்து போகவிருந்த சைவத்தையும் தமிழையும் காத்தவர் நாவலர்! அவர் தமிழினதும் சைவத்தினதும் காவலர்: தமிழ் வசனநடையின் பிதாமகர்! சிறியோர் முதல் பெரியோர் வரை படிக்கக் கூடிய பல நூல்களை எழுதியவர்! ஒவ்வொரு நூலையும் அதற்கு ஏற்ற நடையில் எழுதியவர்! சிறுவர்களுக்கு எழுதிய ''பால பாடம்'' நூலில் இடம்பெற்றுள்ளவை ''நீதிவாக்கியங்கள்!'' இதில் முதலாவது வாக்கியம் ''சைவ சித்தாந்த சார''மாகத் திகழ்வது! இந்த வாக்கியம் பல இடங்களில் ''பண்டிதமணி'' யால் உச்சிமேல் வைத்துப் போற்றப்பட்டு அவரது பல கட்டுரைகளில் எடுத்துக் காட்டப்பட்டது!

## நீதி வாக்கியங்கள்

இந்தச் சரீரம் நமக்குக்கிடைத்தது, நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.

இன்ன காலத்திலே இந்தச் சரீரம் நீங்கும் என்பது விளங்காமையால், நாம் எக் காலத்திலும் கடவுளை வழிபடல் வேண்டும்.

கடவுளையும், அவரை வழிபடும் நெறியையும், அதனால் எய்தும் பயனையும், உனக்குப் போதிக்கும் அருள் வடிவாகிய ஆசிரியர் ஒருவரே உன் உயிர்த்துணை, ஆதலால், அவரை ஒரு காலமும் மறவாதே.

ஈசுவர பத்தியும் நல்லொழுக்கமும் உள்ள பிதா மாதாக்களை உடைமையே பெரும் பாக்கியம்.

தீவிரமாயேனும் மந்தமாயேனும், நல்வினை இன்பத்தையும், தீவினை துன்பத்தையும் வருவிக்கும்.

நன்மை செய்தற்குச் சமயம் வாய்க்கும் பொழுது செய்யாதொழிவை யாகில், பின் ஒரு காலத்தில் அது வாய்ப்பது அரிது.

சோம்பலே தீமைக்கும் துன்பத்துக்கும் பிறப்பிடம்.

தங்கள் நயத்தின் பொருட்டு மாத்திரம் அன்றி, பிறர் நயத்தின் பொருட்டும் பிரயாசப் படுகின்றவர்களே உத்தமர்.

எவ்வளவு அதிக இரகசியமாகச் செய்யப்படும் நன்மைகளையும் முற்றறிவு உடைய கடவுள் அறிந்து, பயன் அளிப்பார்; பிறர் அறிந்தென்! அறியா திருந்தென்!

தன் பொருட்டு மாத்திரம் பிரயாசப் படுபவன் அற்ப இன்பத்தை மாத்திரமே அனுபவிப்பான்:

அவ் வற்ப இன்பமுமோ மிக இழிந்தது.

அறிவும் அதனால் ஆகிய நற்குண நற் செய்கைகளும் உள்ள சான்றோர்களாலே நன்கு மதிக்கப்படுவதற்கு யோக்கியனாய் இரு.

நீ பிறர்க்குச் செய்த உபகாரங்களை நீயே எடுத்துப் புகழ்தல் தக்கது அன்று.

அடக்கம் உடைமை பாலியர்களுக்குச் சிறந்த ஆபரணம்.

நாம் செல்வத்தையும் உபசரிக்கப் படுதலையும் நம்முடைய பிரீதிக்கு மாறாக இழத்தல் கூடும். நல்லொழுக்கத்தையோ அப்படி இழத்தல் கூடாது.

சுசிபுடைமை சரீரத்திற்கு ஆரோக்கியத்தையும், மனசுக்கு இதத்தையும் வளர்விக்கும்.

நீ பிறர்க்கு ஒன்றை வாக்குத்தத்தம் செய்யு முன், அது உன்னால் இயலுமோ இயலாதோ என ஆராய்ந்து கொள்.

இளமையிலே ஒருவன் பழகிய பழக்கம் நன்றே யாயினும், தீதே யாயினும் அதுவே பெரும் பான்மையும் மரண பரியந்தம் அவனைத் தொடரும்.

நமக்கு நல்லொழுக்கமும் புகழும் இன்பமும் வருதல் தவிர்தல்கள், முறையே பெரும் பான்மையும், நமது நற்சார்பு தீச் சார்புகளால் ஆகும்.

நாம் இரகசியமாகக் குற்றம் செய்யும் போது, பிறர் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக்கொள்வோமாயினும், நம்முடைய மனம் நம்மைக் கண்டியா வண்ணம் தப்பிக் கொள்ள மாட்டோமே.

(தொடரும்)

பத்திரிகைத் துறையில் பயிலவும்
''சமய மஞ்சரி''
ஆசிரியர் குழுவில் பணி செய்யவும்
ஆன்மிக ஈடுபாடும்
எழுத்துத் துறையில் நாட்டமும்
உள்ளவர் தொடர்பு கொள்ளவும்:

சமய மஞ்சரி

பொன்னாலை, சுளிபுரம்.

"பண்டிதமணி" என்றால் அது ஒருவர்தான்! அவர்தான் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை! நம்மிடையே வாழ்ந்து அற்புதமான நூல்களை எழுதித் தந்த மகான்! இலங்கைப் பல்கலைக் கழகம் இவரை விதந்து பாராட்டி "இலக்கிய கலாநிதி" பட்டமளித்துக் கௌரவித்தது! இவரது எழுத்துக்கள் எளிமையானவை! ஆயினும் மிக ஆழ்ந்த கருத்துக்களைத் தெரிவிப்பவை! நறுக்குத் தெறித்தாற் போன்ற வசனங்களில் நயமிக்க கருத்துக்களைத் தருவதில் வல்லவர்! இவரது "சைவ நற்சிந்தனைகள்" என்ற நூலில் இடம்பெற்ற கட்டுரை ஒன்று கீழே தரப்பட்டுள்ளது! திரும்பத் திரும்ப படிக்கப் படிக்க அற்புதமான கருத்து விளக்கங்களைத் தருகிறது!

# சமயம்

நினைப்பு, மறப்பு, விழிப்பு, நித்திரை, பிறப்பு, இறப்பு முதலிய காரியங்கள் நமது வல்லமையைக் கடந்து நடக்கின்றன.

அக் காரியங்களை நடத்தி வைக்கும் பொருள் எது?

அப் பொருள் நமது வல்லமையைக் கடந்த பொருள்; கடவுள்.

கடவுளுக்கு வடிவம் உண்டா?

உண்டு.

அது இந்தக் கண்ணாற் காண முடியாது: சுத்த அறிவினாற் காணத் தக்கது.

அதற்கு நீதி என்று பெயர்.

நீதி வெகு ஆழமானது; மிக மிக நீளமானது. "பங்கயத்தயனுமா லறியா நீதி" என்பது மணிவாசகம். நீதியின் ஆழத்தையும் நீளத்தையும் காணுதற்குப் பிரம விஷ்ணுக்களுக்குக் கூடச் சுத்த அறிவு போதிய அளவுக்கு உண்டாகவில்லை.

நீதியை மறைக்கும் குற்றங்கள் இரண்டு. ஒன்று அறியாமை; மற்றது வஞ்சகம்.

அறியாமை பாவமன்று: முயற்சிக்குப் பயன் தராது; அதனாற் குற்றம் எனப்படுகிறது.

வஞ்சகம் படு குற்றம்; மகா குற்றம்; நரகத்துக்கு வித்து. அது அறிவு முனையை அழித்து, அந்தகாரம் செய்து கொண்டிருப்பது.

வழியில் ஒரு பொருளைக் கண்டு எடுக்கின்றோம். பொருளுக்குரியவர் இன்னாரென்று தெரிகிறது. விசாரித்து நிச்சயஞ் செய்யப்

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

போதிய வழிதுறைகளும் இருக்கின்றன. பொருளை அதற்கு உரியவரிடம் ஒப்பிப்பதே நீதி என்று அறிவு சொல்லுகின்றது. வஞ்சகம் அந்த அருமந்த அறிவை மழுக்கி மாயஞ் செய்து விடுகின்றது.

இந்தக் கள்ள வஞ்சகம்தான் நமது பரம சத்துரு. அதனோடு சதா போர் தொடுத்துக் கொண்டே நாம் அவதானமாயிருக்க வேண்டும் நாம் அதனைச் சிறை மீட்டு அறிவு வசப்படுத்த வேண்டும். "நீதி எது! எது!! எது!!!" என்ற விசாரந்தான் வஞ்சகத்தைக் கொல்லும் படை. அப்படையினாலே இச்சையை நேர் செய்து கொண்டால் அறியாமை மெல்ல மெல்ல நீங்கும். அறியாமை நீங்கச் சுத்த அறிவு உதயமாகும்: அந்தச் சூரியோதயத்திலே நீதியின் பிழம்பு ஒரு சாயலாகத் தோன்றத் தொடங்கும். அறிவுச் சூரியன் மேல் எழ எழ, நீதியின் உண்மைத் தோற்றம் — கை, கால் முதலிய அவயவங்கள் — காட்சியளிக்கும், அடி முடி தோன்றும்.

நீதியை விசாரிப்பதிலே — விசாரித்து அந்த நீதியிலே எவ்வித வஞ்சத் தடையுமின்றி நிலை நிற்பதிலே — எவனுக்குச் சதா பரிசுத்த விருப்பம் உண்டோ, அவன் சமயி.

அந்த விருப்பத்தை நூறாயிரம் கள்ளக் காரணங்கள் கற்பித்து எவன் வஞ்சிக்கின்றானோ, அவன் சமயி அல்லாதவன்.

முந்தியவன் அகச் சமயி; மற்றவன் புறச் சமயி.

அகச் சமயி சமயத்துக்குள்ளானவன்; புறச்சமயி சமயத்துக்குப் புறம்பானவன்.

நீதியை வஞ்சமின்றி விசாரித்து விரும்புவது அகம். அதற்குச் சமயம் என்று பெயர்.

நீதிதான் கடவுளின் வடிவம். அதற்கு மற்றொரு பெயர் சிவம். சிவம் என்றால் நன்மை, மங்களம், நீதி என்று பொருள்.

எவன் நீதியோடு சம்பந்தப் படுகின்றானோ, அவன் சிவத்தோடு சம்பந்தப்படுகின்றான்.

சிவத்தோடு சம்பந்தப்படுகிறவனுக்குச் சைவன் என்று பெயர்.

சிவத்தோடு சம்பந்தப்பட்ட சமயம் சைவசமயம்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்" O

---

## ஆன்ம நேயம்

★ ஆன்ம நேயம் என்றால் எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொள்ளுதல் என்பது பொருள்.

வேடர் குலத்துக் குகனையும், பறவைக் குலத்து சடாயுவையும், வானர குலத்துச் சுக்கிரீவனையும், அரக்கர் குலத்து விபீடணனையும் ராமபிரான் ஏற்று அருளியது ஆன்ம யோகத்துக்கு நல்ல உதாரணமாகும்.

ஆங்கிலத்தில் எழுதியும் பேசியும் புதுமை செய்தவர் நோர்மன் வின்செண்ட் பீல்!

இவருடைய நூல்களும், வேறு சிறு பிரசுரங்களும் கோடிக் கணக்குக்குமேல் விற்பனை ஆகியிருக்கின்றன.

தெளிவாகவும், மனத்தில் படும்படியாகவும் எழுதுவதிலும் பேசுவதிலும் அபாரமான திறமை உள்ளவர் இவர்!

பிரார்த்தனை செய்வது எப்படி என்பது பற்றி இவர் தரும் விளக்கம் மிக நன்றாக இருக்கிறது.

# பிரார்த்தனை செய்வது எப்படி?

**— நோர்மன் வின்செண்ட் பீல்**

தினந்தோறும் சில நிமிடங்களை ஒதுக்கி வையுங்கள். அப்போது ஒன்றும் பேசாதீர்கள். கடவுளைப் பற்றி நினைக்கப் பழகுங்கள்.

பிறகு இயல்பாக, சாதாரண வார்த்தைகளில், உங்கள் மனத்தில் உள்ளதைக் கடவுளிடம் சொல்லுங்கள்.

பஸ்ஸில் போகும்போது, அலுவலகத்தில் வேலை செய்து கொண்டு இருக்கும்போது, கடவுள் உங்கள் எதிரே உட்கார்ந்து இருப்பதாகப் பாவனை செய்து கொண்டு குட்டிப் பிரார்த்தனைகளை அடிக்கொரு தரம் பண்ணுங்கள்.

எப்போதும் அது வேண்டும், இது வேண்டும் என்று கேட்டுக் கொண்டே இருக்காதீர்கள். கடவுள் ஏற்கெனவே கொடுத்திருப்பதற்கு நன்றி செலுத்துங்கள்.

உங்கள் பிரார்த்தனைகள் உங்களுக்குப் பிரியமானவர்களுக்குக் கடவுளின் அன்பையும் பாதுகாப்பையும் சம்பாதித்துத் தரும் என்று நம்புங்கள்.

கசப்பு, பகை இவற்றுக்குப் பிரார்த்தனையின் போது இடம் கொடாதீர்கள்.

கடவுளிடம் கேட்க வேண்டியதைக் கேளுங்கள். ஆனால் அவர் கொடுப்பதைப் பெற்றுக் கொள்ளத் தயாராக இருங்கள். நீங்கள் கேட்டவைகளைவிட அவர் கொடுப்பது சிறந்ததாக இருக்கக்கூடும்.

ஆண்டவன் மீது பாரத்தைப் போட்டு விட்டு இயன்றதைச் செய்யுங்கள். பலன் தருவதும் தராததும் அவர் விருப்பம்.

உங்களைப் பிடிக்காதவர்களின் உங்களைச் சரியாக நடத்தாதவர்களின் நலன் கோரிப் பிரார்த்தனை செய்யுங்கள். வெறுப்புணர்ச்சி, ஆன்மிக சக்தியின் முதலாம் நம்பர் விரோதி என்பதை மறவாதீர்கள்.

யார் யாருடைய நன்மை வேண்டிப் பிரார்த்தனை செய்வது என்று ஒரு பட்டியல் தயாரியுங்கள். எவ்வளவு அதிகமான பேருக்கு — குறிப்பாக, சம்பந்தப்படாதவர்களுக்காக — பிரார்த்தனை செய்கிறீர்களோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக உங்களுக்குப் பலன் கிடைக்கும்.

இராஜநாயகத்தின்

# யக்ஞ தரிசனம்

## தனி நூலாக வெளி வர வேண்டும்

''யக்ஞ தரிசனம்'' என்ற தலையங்கத்தில் ''பண்டிதமணி நினைவு மல''ரில் ஒரு நல்ல கட்டுரை இருக்கிறது.

சு. இராசநாயகம் எழுதியிருக்கிறார்.

''பண்டிதமணி அவர்களின் வரிசை பொய்யடிமையில்லாத புலவர் வரிசை, மெய்க்கு அடிமையானோர் வரிசை; மெய்யைச் சொல்லாமல் இருக்கமாட்டாதோர் வரிசை. அந்த வரிசையிலே நின்று தமிழ் கண்ட நூல்களையும், சைவ சித்தாந்த சாத்திரங்களையும் ஆராய்ந்தும் கடைந்தும் பண்டிதமணி அவர்கள் நவநீதம் செய்தவர்கள்'' என்கிறார் இராசநாயகம்!

பண்டிதமணியின் எழுத்துக்களை ஒருவித பக்தியுடனும் ஆழ்ந்தும் கற்ற சிறப்பு இக் கட்டுரையில் தெரிகிறது!

பண்டிதமணி எழுதி வெளிவந்துள்ள எல்லா நூல்களைப் பற்றியுமே ஒரு நல்ல தரிசனத்தை இக் கட்டுரையில் காண முடிகிறது.

பண்டிதமணியின் நூல்களைப் படித்தவர்களுக்கு இக் கட்டுரையைப் படிக்கும்போது ஒரு நல்ல நிறைவு தோன்றுகிறது.

இக் கட்டுரையை இன்னும் சற்று விரித்து எழுதி இராசநாயகம் இதனை ஒரு தனி நூலாகத் தருவாரேயானால், பண்டிதமணியின் அனைத்து நூல்களுக்குமே ஒரு அற்புதமான நுழைவாயிலாக அது அமையும்.

அப்படியான ஒரு நூல் புதிய சந்ததிக்கு நல்ல பயன் தருவதாகவும் இருக்கும்.

அது நிற்க —

பண்டிதமணியின் நூல்கள் இப்போது எங்கு தேடியும் கிடைக்க மாட்டேன் என்கிறது.

எந்தக் கடையில் கேட்டாலும் கையை விரிக்கிறார்கள்.

பள்ளிக்கூட நூல் நிலையங்களிலும், கிராம சபை நூல் நிலையங்களிலும் அவாது இரண்டொரு நூல்களே உள்ளன.

படிப்பதற்கும், படித்தபின் சேர்த்து வைத்திருப்பதற்கும் பண்டிதமணியின் நூல்களைத் தேடுபவர்கள் பலர் இப்போது இருக்கிறார்கள்.

நாவல்கள் என்ற பெயரிலும் சஞ்சிகைகள் என்ற பெயரிலும் உப்புச் சப்பில்லாத மூன்றாந்தர விஷயங்கள் எப்படி தமிழ் நாட்டிலிருந்து இங்கு வந்து சேருகின்றனவோ, அதே மாதிரித்தான் இலக்கியத்தின் பேராலும் சமயத்தின் பேராலும் வந்து சேருகின்றன!

பண்டிதமணி போன்றோரின் நூல்கள் படிக்கக் கிடைக்காவிட்டால் தலை விதியே என்று இந்த மூன்றாந்தர நூல்களோடு நம்மவர்கள் நிற்க வேண்டியதுதான்.

— சாமிஜி

# வேஷம் வெளிப்பட்டால்

**பிலிலி — கிரஹாம்**

மணிப் புறாக்கள் கூட்டமாய் கூடி தரையில் சிதறிக் கிடந்த தானிய மணிகளை மேய்ந்து கொண்டிருந்தன.

மரக் கிளையொன்றில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த கிழட்டுக் காகம் ஒன்று மெல்லக் கீழே இறங்கியது.

அதற்கு நல்ல பசி.

தானிய மணிகளை மேயலாம் என்றால் புறாக் கூட்டம் காகத்தைக் கிட்டே வரவிடாமல் விரட்டி விடும் என்று அச்சம்.

காகம் சற்று நேரம் யோசனை செய்த போது கீழே ஒரு மூலையில் சாம்பல் குவித்திருந்தது அதன் கண்ணில் பட்டது.

அந்தச் சாம்பல் குப்பையில் விழுந்து புரண்டது. நன்றாக உடம்பு முழுவதும் சாம்பலை அப்பிக் கொண்டது தன்னைத்தானே திரும்பிக் கழுத்தை வளைத்துப் பார்த்துக் கொண்டது.

தைரியமாக மெல்லத் தாவிச் சென்று புறாக் கூட்டத்தின் நடுவில் போய் நின்று கொண்டது.

அதுவும் புறாக்களோடு புறாவாக மணிகளை மேயத் தொடங்கியது.

அதன் கறுப்பு நிறம் மாறிய சாம்பல் நிறம் முதலில் புறாக்களுக்குச் சந்தேகம் தரவில்லை.

சற்று நேரம் கடந்து புறாக்கள் காகத்தின் நடவடிக்கைகளைப் பார்த்துச் சந்தேகப்பட்டன.

"இவன் என்ன புது மாதிரியாக நடக்கிறான்? எப்படியோ கழுத்தை வளைக்கிறான்? எப்படியோ கண்ணை உருட்டுகிறான்?" என்றும் தங்களுக்குள் பேசிக் கொண்டன.

என்றாலும் தங்களைப் போன்றே காகமும் சாம்பல் நிறத்தில் இருந்ததால், ஒருவாறு சமாதானப்பட்டு, "இதுவும் புறாதான்.... உடம்பு சரியில்லைப் போலிருக்கிறது" என்று பேசிக்கொண்டு தம் பாட்டில் இரை எடுக்கத் தொடங்கின.

காகம் தன்னுடைய வேஷம் வெளிப்படவில்லை என்கிற தைரியத்தில் தானிய மணிகளை மேய்ந்து கொண்டிருந்தபோது திடீரென்று அது நடந்து விட்டது.

மேலே பறந்துபோன பருந்தோ எதுவோ நழுவ விட்ட செத்த எலி ஒன்று பொத்தென்று அங்கே விழுந்தது.

அதுவரை இரை எடுத்துக் கொண்டிருந்த காகத்தின் புத்தி மாறியது.

தானியத்தை விட்டு விட்டுச் செத்த எலியின் மீது பாய்ந்து அதை உண்ணத் தொடங்கியது.

புறாக்கள் இப்போது புரிந்து கொண்டன.

காக்கைப் பயல் வேஷம் போட்டு நம்மை ஏமாற்றி விட்டான் என்று ஆத்திரப்பட்டு அதைக் கொத்தி விரட்டின.

வெளி வேஷங்களினாலே ஒருவன் தேவனை அடைய முடியாது.

முழுவதுமாய் மனம் ஈடுபட்டுத் தான் பக்தி செய்ய வேண்டும்.

சலனப் படுகிறவர்கள் இந்தக் காகம் மாதிரி வேஷம் வெளிப்பட்டுச் சங்கடப் படுவார்கள். O

---

# என்னிலும் சிறியவர் யாரோ?

[redacted]

மகான்கள் உயர்வு தாழ்வு என்ற பேத உணர்ச்சியை விடுத்து தங்களை எளியவர்களாகவே பாவித்து எல்லோரிடமும் சமமாய்ப் பழகும் பண்பு உடையவர்கள்.

ஓர் உதாரணம்:

திருமலை நம்பி என்ற வைணவ சமயப் பெரியார் திருமலையிலே ஏழுமலையானைப் போற்றியவாறு வாழ்ந்து வந்தபோது, ஒரு சமயம், அவரைக் கண்டு சேவிக்க அவருடைய மருமகனும் சீடனுமான யதிராஜர் என்று அழைக்கப்படும் ராமானுசர் திருமலைக்கு விஜயம் செய்தார்.

குருநாதர் திருமலை நம்பிகள் அவரை எதிர் கொண்டழைக்க, தாமே ஊரின் எல்லைக்குச் சென்றார்.

தன்னை எதிர்கொள்ளத் தன் குருநாதரே வருவார் என்பதைச் சற்றும் எதிர் பாராத ராமானுசர், அதிர்ந்து, ''சுவாமி என்ன அபசாரம் இது? அடியேனை வரவேற்கத் தாங்களா வருவது? யாராவது ஒரு சிறியவரை அனுப்பி வைத்திருக்கலாமே!'' என்று உடல் குறுகிடக் கூறினார்.

திருமலை நம்பிகள் நகைத்துக் கொண்டே ''யதிராஜா! நானும் முதலில் அப்படித்தான் எண்ணினேன். அனால், என்னைவிடச் சிறியவன் வேறு யாரும் கிடைக்காமையால், நானே வந்தேன்!'' என்று பதிலளித்தார். O

# சிவன் கோவில் கட்டிய புண்ணியம் எப்படி வந்தது?

## சோதிடம் சொன்ன மரணத்திலிருந்து தப்பினான்.

அந்த ஊரிலே புகழ் பெற்ற ஒரு சோதிடர் இருந்தார். ஒரு நாள் மாலை நேரத்தில் அவரிடம் தம் சாதகத்தைப் பார்க்க ஓர் ஏழை விவசாயி வந்தார்.

சாதகத்தைச் சோதித்துப் பார்த்தார் சோதிடர்.

அந்த விவசாயிக்கு அன்றைய இரவே எட்டு மணிக்கு மரணம் நேரக் கூடிய ஒரு கண்டம் இருந்தது.

சோதிடர் விவசாயியிடம் நேரிடையாக எதுவும் சொல்ல விரும்பாமல், "ஐயா, இன்றைய தினம் எனக்கு முக்கியமான ஒரு வேலை இருக்கிறது. ஏதோ வேலைகளுக்கு இடையில் அதை நான் மறந்தே போய் விட்டேன். தங்கள் சாதகம் என்னிடமே இருக்கட்டும். நாளைக் காலையில் தாங்கள் என்னை வந்து பாருங்கள்" என்று மழுப்பி விட்டார்.

சோதிடரின் வீட்டிலிருந்து புறப்பட்ட விவசாயி, பக்கத்திலிருந்த தமது கிராமத்தை நோக்கி நடந்தார்.

பெருமழை கொட்டத் தொடங்கியது.

மழைக்கு ஒதுங்குவதற்குச் சுற்று முற்றும் பார்த்த அவர் கண்களுக்குச் சற்றுத் தொலைவில் பாழடைந்த சிவன் கோயில் ஒன்று தட்டுப்பட்டது.

சிவன் கோயிலில் முன்னால் இருந்த மண்டபத்தில் ஒதுங்கிக் கொண்டார்.

கோயிலின் பாழடைந்த நிலையைக் கண்டு பெரிதும் வருந்தினார்.

"ஆ! கோயிலின் கர்ப்பக்கிரகமும், மண்டபமும் இந்த அளவுக்கு கேட்பாரற்றுப் பாழ்பட்டுப் போயிருக்கின்றனவே! என்னிடம் மட்டும் போதுமான பணம் இருந்தால் இந்தக் கோவிலைப் புதுப்பிக்கும் வேலையைத்தான் முதலில் செய்வேன்" என்று நினைத்துக் கொண்டார்.

அதோடு அவர் சிந்தனை மேலும் விரிந்தது.

மானசிகமாக கோபுரம், ராஜ கோபுரம், உட்பிரகாரங்கள் ஆகியவற்றை அமைத்தார்.

கும்பாபிஷேகத்துக்கு வேதியர் புடை சூழ திருக்குடம் பவனி வருவதாகக் கற்பனை செய்தார்.

அந்தக் கற்பனையிலேயே கும்பாபிஷேகத்தை நடத்தி முடித்து ஆனந்தமாக மெய்யுருகி இறைவனைத் தொழுதார்.

அந்த நிலையிலே தற்செயலாக ஏறிட்டு நோக்கினார். அங்கே சரி

யாக அவரது தலைக்கு மேலே ஒரு கருநாகம் படமெடுத்த நிலையில் அவரைக் கொத்தத் தயாராக இருந்தது.

''ஐயையோ!'' என்று அலறிப் புடைத்துக் கொண்டு மண்டபத்தைவிட்டு வெளியே ஓடி வந்து விட்டார்.

அதே சமயத்தில் மழையால் மிகவும் தளர்ந்திருந்த பாழடைந்த மண்டபம் திடு திடுவென்று இடிந்து தரைமட்டமாயிற்று.

விவசாயி தமது வீடு திரும்பினார்.

மறுநாள் சென்று சோதிடரைச் சந்தித்தார்.

சோதிடர் திகைத்தார்.

அவர், நாம் சோதிடக் கணக்கில் தவறி விட்டோமோ?'' என்று கருதி, சோதிட நூல்களை எடுத்துத் துல்லியமாக ஆராய்ந்தார். கணக்குச் சரியாக இருந்தது.

''இப்படிப்பட்ட கண்டத்திலிருந்து ஒருவன் தப்ப வேண்டுமானால் அவனுக்கு ஒரு சிவன் கோவிலைக் கட்டி முடித்துக் கும்பாபிஷேகம் செய்த புண்ணியம் இருக்கவேண்டும்'' என்று சோதிட நூலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

''பாவம்! ஏழை விவசாயியினால் கோவிலைக் கட்டிக் கும்பாபிஷேகமா நடத்த முடியும்?'' என்று நினைத்தபடியே, சோதிடம் அறிவித்த எல்லா விபரங்களையும் விவசாயியிடம் தெரிவித்தார்.

விவசாயி தனது சிந்தனையிலேயே கோயில் கட்டி கும்பாபிஷேகம் செய்து மனமுருகி பிரார்த்தனை செய்து விட்டாரே!

தூய்மையோடும் உள்ளன்போடும் மனம் செயல்படும் போது புறச்செயல் எதற்கு? O

---

★ *தமிழில் ஆதிசங்கரரின் தோத்திர நூல்கள்*

மொழி பெயர்ப்பது மிகவும் கடினமான காரியம்! ஒரு மொழிதல் உள்ள கவிதைகளை இன்னொரு மொழியில் கவிதைகளாகவே தருவது மிக மிகக்கடினம்!

ஆதிசங்கரரின் தோத்திரங்களை மொழி பெயர்ப்பது எளிதான செயல் அல்ல! வட மொழியில் ஆழ்ந்த அறிவும், சிறந்த தமிழ்ப் புலமையும், ஆழமான பக்தி உணர்வும் இருந்தால் மட்டுமே இது சாத்தியமாகும்!

ஆதி சங்கரரின் ''சௌந்தர்ய லகரி'' ''சிவானந்த லகரி'' ''கனகதாரா ஸ்தவம்'' என்பவற்றை மிகவும் அருமையான தோத்திரப் பாடல்களாக தமிழிலே தந்திருக்கிறார், ஆவரங்கால் பண்டிதர் ச. சுப்பிரமணியம்!

இவரது மொழி பெயர்ப்பில் ஆழ்ந்த கவித்துவமும், மூலத்திலிருந்து பிறழக் கூடாது என்ற கற்பு நெறியும், நல்ல தமிழ்ப் புலமையும், சிறந்த பக்தி உணர்வும் வெகு ஆழமாகவே தெரிகின்றன!

# இந்தத் தடவை ஏன் குணமாகவில்லை!

ஒருவனுக்குத் தீராத வயிற்று வலி.

எத்தனையோ மருந்து சாப்பிட்டான்.

ஈரவே இல்லை.

கடைசியில் கடவுளைப் பிரார்த்தித்தான். "கொடூரமான இந்த வயிற்று வலியை நீதான் தீர்க்க வேண்டும்" என்று.

ஆண்டவன் தோன்றி, "இதோ இந்தச் செடியில் உள்ள இலைகளை அரைத்துப் பாலில் கலந்து சாப்பிட்டால் வலி தீரும்!" என்றார்.

அவனும் சாப்பிட்டான்.

வலி முழுவதும் நீங்கிக் குணம் அடைந்து விட்டான்.

ஆண்டுகள் பல கடந்தன

திடீரென்று ஒருநாள் வயிற்று வலியால் மீண்டும் துன்பப்பட்டான். நேராக அந்தச் செடியருகே சென்று அதன் இலைகளை அரைத்துப் பாலில் கலக்கிச் சாப்பிட்டான்.

குணம் ஆகவில்லை.

வலி குறையவில்லை.

திகைத்தான்.

"ஆண்டவனே, முன்னால் நீங்கள் சொல்லியபடி இந்த இலைச் சாற்றைக் குடித்தேன், குணமாயிற்று. இந்தத் தடவை அப்படிச் செய்தும் குணமாகவில்லையே!" என்றான்.

தெய்வம் கூறியது:

"முன் தடவை நீ என்னை வேண்டினாய்! என் மீது உனக்கு நம்பிக்கை இல்லை. நீயே சென்று உன் விருப்பப்படி செய்தாய். அதனால்தான் குணமாகவில்லை. இதுதான் வித்தியாசம்!" O

---

# கொல்லாமல் விட்டதற்குக் காரணம் என்ன?

ஒரு புனிதப் போரின் பொழுது ஹஜரத் உமர் அவர்கள் ஒரு யூத வீரனைக் கீழே வீழ்த்தி அவன் மார்பின் மீது அமர்ந்து கொண்டு அவனைக் கொல்லத் தன் வாளை ஓங்கினார்.

அப்பொழுது அவன் அவர் முகத்தில் எச்சிலைத் துப்பி விட்டான்.

அவர் அவனைக் கொல்லாமல் விட்டுவிட்டு எழுந்து விட்டார்.

அவ் வீரன் ஆச்சரியப்பட்டு அவரிடம் காரணம் வினாவினான்.

அதற்கு உமர் கூறினார்: "வீரனே, நான் இதுவரை உன்னுடன் போர் செய்தது அல்லாவிற்காகவும், இஸ்லாத்திற்காகவும் தான்! ஆனால் நீ என் முகத்தின் மீது துப்பியதும் என்னுள் கோபம் பொங்கியது ஆத்திரம் வந்து உணர்ச்சி வசப்பட்டு விட்டேன். இனி நான் உன்னைக் கொன்றால், என்னை நீ அவமதித்த குற்றத்திற்கு நான் ஆளாகி விடுவேன். அதனால்தான் நான் உன்னைக் கொல்லவில்லை!" O

# திருமணம் நடத்திவைக்கும் பெண் புரோகிதர்கள்

இதுவரை ஆண்களின் கோட்டையாக இருந்த புரோகிதத் தொழிலை, தற்போது பெண்கள் முற் கையிட்டுப் புரோகிதத் தொழிலைப் பிடித்துக் கொண்டு இருப்பது ஒரு புதுமையான, சுவாரசியமான விஷயம்.

இப் பெண்கள் யார்?

மிகவும் ஆசாரமான, பழமைக் கருத்துகளில் நம்பிக்கை கொண்ட மகாராஷ்டிர குடும்பங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள், பூனாவில் உள்ள "உத்தயகான் பிரசாத் மங்கள் கார்யாலயா" எனும் வேத பாடசாலையில் வேதங்களையும், பூசைகளையும் மற்றும் சடங்குகளையும் நடத்தும் முறைகளையும், மந்திரங்களையும் கற்றுத் தேர்ந்தவர்கள்!

மகாராஷ்டிர மாநிலத்தில் இது வரை ஆசாரமான பிராமணர்களின் தனியுரிமையாக இருந்த, புரோகிதத் தொழிலை தற்போது பெண்களும் நடத்தி வருகிறார்கள். இப் பெண் புரோகிதர்கள் ருஷிகா என்று அழைக்கப்படுகிறார்கள்.

பயிற்சி பெற்றுள்ள சுமார் 500 க்கும் மேற்பட்ட இப் பெண் புரோகிதர்கள் சடங்குகளை நடத்தி வைக்கும் தொழிலில் தங்களுக்கென்றே ஒரு சிறப்பிடத்தை அமைத்துக் கொண்டுள்ளார்கள்.

இப் பெண்கள் இல்லற வாழ்க்கையைத் துறந்து விட்ட சந்நியாசிகள் அல்லர்.

இவர்கள் மிகவும் ஆசாரம் நிறைந்த, பழமையில் நம்பிக்கை கொண்ட, குடும்பங்களைச் சேர்ந்த இல்லத்தரசிகள். பலர் 40 வயதுக்கு அதிகமானவர்கள், மத்திய தரக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். தங்களின் புதிய தொழில் காரணத்தால் தங்கள் குடும்ப வேலைகளைக் கவனிப்பதில் எந்தச் சுணக்கமும் இன்றி, தங்கள் அன்றாட குடும்ப வாழ்க்கையை நடத்துகிறார்கள்.

இப் பெண் புரோகிதர்கள் பூனாவில் சதாசிவ பேட்டையிலுள்ள உத்யான பிரசாத் மங்கள் கார்யாலயா எனும் பயிற்சிக் கூடத்தில் வேதங்கள், மந்திரங்கள், சடங்குகள் நடத்துவது போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்தவர்கள். இப் பயிற்சியைப் பெற, ஆசிரியைகள், நர்சுகள், ஏன் பெரிய பெண் அதிகாரிகளும் முன் வந்துள்ளனர்.

1975 ம் ஆண்டில் சங்கர் தட்

டேயும், அவர் மனைவி புஸ்பா தட்டேயும், புரோகிதத் தொழிலைப் பெண்களுக்குக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்த போது, பலத்த ஆட்சேபம் எழுந்தது.

''நாங்கள் புரோகிதத் தொழிலை ஏற்று நடத்தும் வரை, ஆண் புரோகிதர்கள், மிக அதிகமான தட்சணை கறந்து கொண்டிருந்தார்கள். இப்போது நாங்கள் இருப்பதால் முன் போல் அதிக தட்சிணையைக் கறக்க முடிவதில்லை என்பதால் எங்களைக் கண்டால் அவர்களுக்குப் பிடிப்பதில்லை'' என்கிறார் ஒரு பெண் புரோகிதர்!

''ஆண் புரோகிதர்கள் தட்சிணை வாங்குவது ஒன்றையே குறியாகக் கொண்டுள்ளார்களே ஒழிய, மந்திரங்களைச் சிரத்தையாகச் சொல்வதில்லை. மேலும் மந்திரங்களை விளங்கிப் பொருள் கூறுவதில்லை. பிராமணர்களுக்கு மட்டுமே பூசை செய்ய தெய்வீக சக்தி இருக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். இதில் எங்களுக்கு நம்பிக்கையில்லை. எல்லாச் சாதியினரும் மந்திரங்களைக் கற்றுக் கொள்ளலாம் என்று நாங்கள் ஊக்குவிக்குறோம்'' என்றார் இன்னொரு பெண் புரோகிதர்.

காலம் மாறிக்கொண்டே வருகிறது. பூனாநகரில் பலர் பூசை, சடங்குகள் நடத்த பெண் புரோகிதர்களையே அழைக்கிறார்கள். ''பெண்கள் மந்திரங்களை உச்சரிக்கும்போது, இனிமையாக மிருதுவாக இருக்கிறது; மந்திரங்களில் இலயித்து உச்சரிப்பதால் ஈடுபாடு ஏற்படுகிறது'' என்கிறார் மற்றொரு பெண் புரோகிதர்.

''பூசைக்கு நீண்ட நேரம் ஆனாலும், நாங்கள் பூசைக்கு வேண்டிய எல்லா மந்திரங்களையும் கூறி, மந்திரங்களுக்கு விளக்கமும் கூறுகிறோம்'' என்கிறார் ஒருவர்.

இவர்கள் பிரபலமாக ஆகியுள்ளதற்கு இன்னொரு காரணம், இவர்கள் தட்சிணையைப் பற்றிக் கவலைப்படுவதில்லை என்பதே. தட்சிணையாக எவ்வளவு கொடுத்தாலும் பேரம் பேசாமல் வாங்கிக் கொள்கிறார்கள்.

பல சமயங்களில் இலவசமாகவே சடங்குகளை நடத்திக் கொடுக்கிறார்கள் என்பதே இவர்களுக்கும் ஆண் புரோகிதர்களுக்கும் உள்ள வேறுபாடு.

''மக்கள் எங்களை அங்கீகரித்து வருகிறார்கள். புதியதான எதுவும் உடனே ஒப்புக்கொள்ளப் படுவதில்லை. காலக்கிரமத்தில்தான் மாறுதல் ஏற்படும். மந்திரங்களைச் சொல்லிக் கொடுக்கப் பல இடங்களிலுமிருந்து அழைப்பு வருகிறது'' என்கிறார் இன்னொருவர்.

பழைமையான பழக்கங்கள் மாறி வந்தாலும் இப் பெண் புரோகிதர்கள், தாங்கள் வீட்டுக்கு விலக்காகும் நாட்களில் தொழிலைச் செய்வதில்லை.

இறப்பு சம்பந்தப்பட்ட சடங்குகளை நடத்திக் கொடுக்க மட்டும் இப் பெண் புரோகிதர்களுக்குப் பயிற்சி இல்லை.

உத்யான கார்யாலபா பயிற்சிக் கூடத்தில் எல்லாச் சாதிப் பெண்களும், எந்த வயதுப் பெண்களும் சேரலாம். ஆனால் ஆண்களுக்கு இப்பயிற்சிக் கூடத்தில் சேர அனுமதி கிடையாது. O

*(''மங்கையர் மலர்' மார்ச் 94 இதழில்)*

கோயிற் சிறப்பு

# அதிசய அற்புதர்

சில இடங்களில் வழிபாடு செய்யும் போது உள்ளத்தில் அற்புதமான ஒரு நிறைவு ஏற்படுகிறது. ஆண்டவன் அருள் வெள்ளமும் அமோகமாகக் கிடைக்கிறது.

பலர் அனுபவத்தில் கண்ட உண்மை!

அப்படியான ஓர் இடம் —

பொன்னாலயம்!

சுமார் நூறு வருடங்களுக்கு முன் "ஆருக்கும் பொன்னாலை ஆலயத்துள்ளார் அதிசய அற்புதரே" என்று மனம் நிறைந்து ஓர் அன்பர் பாடினார்.

அவருடைய அனுபவம் இன்றும் உண்மையாகவே உள்ளது.

அமைதியான சூழலில், மிக விசாலமான நிலப் பரப்பில், மிகப் பெரிய கோயிலாக இது உள்ளது.

கதிர்காமம், கோணேஸ்வரம், கேதீச்சரம், என்ற பழமையான கோயில்களின் பெருமை பேசும் தட்சிண கைலாய புராணம், பொன்னாலயத்தின் மகாத்மியத்தையும் கூறுகிறது.

குளக்கோட்டு மன்னன் காலத்தில் இக் கோயிலுக்கு ஏழு வீதிகள் இருந்தனவாம்.

அப்போதிருந்தே ஏழாவது வீதியின் முன் முகப்பில் இருந்த பிள்ளையார் கோயில்தான் இப்போதும் இங்கிருக்கும் பிள்ளையார் கோயில்.

வரதராசப் பெருமாளின் கோயிலுக்குச் செல்பவர்களின் வசதிக்காக குளக்கோட்டு மன்னன் அமைத்த குளம், பிள்ளையார் கோயிலுக்கு முன் தற்போது உள்ள குளமோ என்று கருதவேண்டி உள்ளது.

வரம் தரும் வரதராசர், பெரிய பிள்ளையார், அரசமரத்தினடியில் இருக்கும் பெரிய வயிரவப் பெருமான், பிரதான கோயிலின் உள் வீதியில் கோயில் கொண்டிருக்கும் நாகதம்பிரான், மகாலக்குமி, ராமபிரான், பூமிலக்குமி, சனிபகவான், அனந்த சயனப் பெருமாள், நவக்கிரக நாயகர்கள், ஆஞ்சநேய மூர்த்தி — எல்லாருமே அருட் கடல்கள்.

சிதம்பரம், கதிர்காமம் என்னும் பெரிய தலங்களில் போல் பொன்னாலை வரதராசப் பெருமாள் கோயிலிலும் எல்லா மூர்த்திகளும் அருட் புதுமை உள்ளனவாக விளங்குவது பொன்னாலயத்தின் தனி விசேஷம்!

இங்கு ஒவ்வொரு மூர்த்திக்கும் தனித் திருநாள், விசேட வழிபாடு என்பன உண்டு.

— பண்டிதர்
தி. பொன்னம்பலவாணர்

# இடுப்பு வேட்டி நனைந்து போகுமா ?

''ஏன் இவ்வளவு தாமதம்?'' என்று சினந்தார் சாது.

''நான் என்ன சுவாமி செய்வேன்? ஆற்றைக் கடந்து வர வேண்டி இருக்கிறது. பரிசல்காரன் குறித்த நேரத்துக்கு வருவதில்லையே!'' என்று பய பக்தியோடு மொழிந்தாள் அவருக்குப் பால் கொண்டுவந்து தரும் அந்த மங்கை.

சாதுவின் கோபம் தணியவில்லை.

''என்ன, பரிசலுக்காகவா காத்திருக்கிறாய்? இறைவனுடைய பெயரைச் சொன்னால் சம்சார சாகரத்தையே தாண்டி விடலாமே? அப்படி இருக்கிறபோது அவருடைய பெயரைச் சொல்லிக் கொண்டு இந்த ஆற்றைக் கடந்து வர முடியாதா?'' என்று முழங்கினார்.

பால்காரி அவர் சொற்களை உள்ளத்தில் வாங்கிக்கொண்டு மௌனமாகப் போய் விட்டாள்.

அடுத்த நாள் முதல் குறித்த நேரத்தில் பால் வந்தது.

சாதுவுக்கு ஒரே ஆச்சரியம்!

''எப்படி இப்பொழுதெல்லாம் நேரம் தவறாமல் வருகிறாய்?'' என்று அவர் ஒரு நாள் கேட்டார்.

''நீங்கள் உபதேசம் செய்தபடி கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மேலே நடந்து வருகிறேன்'' என்றாள்.

சாதுவுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை.

நேராகவே இதைப் பரிசோதிக்க வேண்டுமென்று அவர் பால்க்காரியை அழைத்துக்கொண்டு ஆற்றுக்குப் புறப்பட்டார்.

பால்காரி கடவுள் பெயரைச் சொல்லிக் கொண்டே ஆற்றின் மேலே ஒய்யாரமாக நடந்து போனாள்.

சாதுவும் புறப்பட்டு, ஆயிரம் பெயர்களால் கடவுளைக் கூவிக் கொண்டே ஆற்றில் அடி வைத்தார்.

அவரால் நீரின்மேல் நடக்க முடியவில்லை.

உள்ளே மூழ்கிக் கொண்டே இருந்தார்.

''ஐயா,! கடவுள் பெயரைச் சொல்லுகிறபோது உங்களுக்கு எதற்குச் சந்தேகம் வந்தது? இடுப்பு வேட்டி நனைந்து போகுமோ என்று தூக்கிப் பிடித்துக் கொண்டீர்களே? அப்படியானால் உங்களுக்கு கடவுள் மீது நம்பிக்கை ஏற்படவில்லை என்றுதானே அர்த்தம்!'', என்று கூறிக்கொண்டே நடந்தாள் பால்காரி. O

சைவப் பெரியாரும் தமிழறிஞருமான "ஆத்மஜோதி" முத்தையா அவர்கள் இரண்டு வருடங்களுக்கு மேல் இந்தோனேசியா நாட்டில் வாழ்ந்து சைவப்பணியும் தமிழ்ப் பணியும் புரிந்திருக்கிறார்.

தனது அனுபவங்களை "இந்தோனேசியாவில் இரண்டு வருட அனுபவம்" என்ற நூலாக எழுதியிருக்கிறார்.

# இந்தியாவுக்கு அடுத்த படியாக இந்துக்கள் அதிகம் வாழும் நாடு இந்தோனேசியா

தொண்டிக் கணபதி
விவரிக்கிறார்

இந்தோனேசியா என்னும் சொல்லுக்கு இந்துக்கள் வாழும் தேசம் என்பது பொருள். உலகத்தில் இந்தியாவுக்கு அடுத்தபடியாக அதாவது இரண்டாவதாக இந்துக்கள் வாழும் பிரதேசம் இந்தோனேசியாவாகும். ஆகவே பெயருக்கேற்ப பொருளும் அமைந்திருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லையல்லவா?

சுமாத்திரா, யாவா, போர்னியோ, பாலித்தீவு ஆகிய நான்கு பெருந் தீவுகளும் மூவாயிரத்துக்கு மேற்பட்ட சிறு தீவுக் கூட்டங்களும் சேர்ந்ததே இந்தோனேசிய இராச்சியமாகும்.

மூவாயிரம் தீவுகளிலும் மக்களே இல்லை. பாலித்தீவில் மாத்திரம் ஒன்றரைக்கோடி இந்துக்கள் வாழுகின்றார்கள். ஒரு காலத்தில் இந்தோனேசியா முழுவதிலும் இந்துக்களே வாழ்ந்ததாகச் சரித்திரச் சான்றுகள் கூறுகின்றன. படையெடுப்புக்களின் தாக்கத்தால் இன்று இந்தோனேசிய இராச்சியம் முஸ்லிம் இராச்சியமாக விளங்குகின்றது.

யாவாத் தீவின் தலைநகரம் ஜாகர்த்தா என்பது ஜாகர்தாவில் ஒரு பெரிய ஆதனசாலை இருக்கி

மஜோதி" நா.
இந்தோனே
பணியும் செய்

இரண்டு
ார்.

எழுத்தாளர் "நந்தி"யின் முன்னுரையுடன் இந்நூல் 1986 ல் வெளிவந்திருக்கிறது.

இந் நூலில் இடம் பெற்றுள்ள சில பகுதிகள் கீழே தரப் பட்டுள்ளன.

## ஆத்மஜோதி முத்தையா

இந்து, இஸ்லாம், பௌத்தம், கிறிஸ்தவம் ஆகிய நான்கு மதங்களும் இந்தோனேசிய அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மதங்களாகும்.

இந்தோனேசிய அரசியல் பஞ்சசீலக் கொள்கையின் அடிப்படையில் அமைந்த படியினால் நான்கு சமயங்களுக்கும் ஒரே வித ஆதரவும் பாதுகாப்பும் உண்டு.

எந்தச் சமயத்தவராயினும் அவர் அச்சமய ஒழுங்கு கட்டுப்பாடுகளுக்கமைந்து வாழ வேண்டும்.

எந்தச் சமயத்தையும் சாராது றது. நூதனசாலையில் இருக்கும் புதைபொருள் ஆராய்ச்சிப் பொருட்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவை இந்து சமயச் சின்னங்களே! நூதன சாலையின் நுழைவாயிலில் சுமார் ஆறு அடி உயரமான தொந்திக் கணபதி ஒருவர் வீற்றிருக்கிறார்!

### சமயத்தைச் சாராது இருந்தால் சிறைத் தண்டனை

தனக்குச் சமயம் இல்லை என்று சொன்னால் அவர் கால வரையறையின்றி அரசாங்க விருந்தினராக இருக்க வேண்டும். மிகக் கடுமையான சிறைத்தண்டனை அனுபவிக்க நேரிடும்.

### அறுபதுக்கு மேற்பட்ட மொழிகள்

இந்தோனேசியாவைத் தாயகமாகக் கொண்ட அனைவரும் இந்தோனேசியர் என்று அழைக்கப் படுவர். இந்தோனேசிய மொழி அனைவருக்கும் பொதுவானதாகும். பாடசாலைகளில் இந்தோனேசிய மொழி மூலமே கல்வி கற்க முடியும். ஆங்கிலத்திற்கும் ஒரு பாட நேரமுண்டு.

இந்தோனேசியாவில் அறுபதுக்கும் மேற்பட்ட மொழிகள் உண்டு. அவை அத்தனையும் எழுத்து வழக்கற்ற மொழிகளாகும். பேச்சு வழக்கு மாத்திரம் உண்டு.

### மதப் பள்ளிகளில் தமிழ்

தமிழர் மதப் பள்ளிகளில் காலையில் இரண்டு மணி நேரம் தமிழ் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது.

ஆசிரியைகளுக்குரிய சம்பளத்தை கோயில் நிர்வாகமே வழங்கி வருகின்றது.

தமிழ் கற்கும் பிள்ளைகளுக்குத் தமிழ் நாட்டு அரசாங்கம் பாலர் வகுப்பு முதல் எட்டாவது வகுப்பு ஈறான பிள்ளைகளுக்குத் தமிழ்ப் பாட நூல்களை அனுப்பி வைத்து உதவி செய்திருக்கிறது.

கல்கி, ஆனந்தவிகடன், குமுதம் போன்ற வார வெளியீடுகளையும் இந்தியத் தூதுவர் காரியாலயம் வரவழைத்துக் கொடுத்துக் கொண்டு வருகிறது.

## மைதானம் மேடான் ஆகியது

மைதானம் என்ற தமிழ்ச் சொல் மைடான் ஆகி, இப்போது மேடான் என்று அழைக்கப்படுகிறது. சுமாத்திராவின் தலைநகரம் மேடான் ஆகும்.

இந்தோனேசியாவில் பல தமிழ்ச் சொற்கள் உச்சரிப்பு மாறுபாட்டால் உருமாற்றம் பெற்று விட்டன.

தண்ணீர் சேர்த்து வைக்கும் பெரிய டாங்கிகள் தீர்த்த நாடி என்று அழைக்கப்படுகின்றன. இச்சொற் பிரயோகத்தை தமிழ் நாட்டிலோ, அன்றி ஈழத்திலோ காண முடியாது.

ஆகாய விமானம் கருடா என்று அழைக்கப்படுகின்றது.

அரசாங்கச் சின்னமும் கருடனேயாகும்.

தர்மபுத்திரா, குரு இயக்கம், குரு பக்தி, சூரிய, சந்திர, நிர்வாணா, இராமா போன்ற சொற்கள் பெரிய ஸ்தாபனங்களுக்குப் பெயர்களாக அமைந்துள்ளன.

## காகம் இல்லை!

சுமாத்திராவில் காகத்தைக் காண முடியாது. காகத்தை மலாய் மொழியில் காக்கா என்றே அழைப்பர். இங்குள்ள இந்துத் தமிழர்கள் புரட்டாசி மாதத்தில் சனிக்கிழமை விரதம் அனுட்டிப்பர்.

எங்கள் ஊர்களைப் போல காகத்துக்குச் சோறு வைப்பதில்லை. சனீஸ்வரனுடைய வாகனம் காகம். காகத்திற்குச் சோறு வைத்தே உண்ணும் வழக்கம் நம்மவரி

---

★

### எது உயர்வு?

மனிதனுடைய வளர்ச்சி அவன் உடம்பைப் பற்றியது அன்று. அது மனத்தைப் பற்றியதாகும்.

மனப் பண்பு வளர வளர மனிதன் வளருகிறான்.

மனத்தின் இயல்பு ஒன்றை விட்டு ஒன்றைப் பற்றுவதுதான்.

அப்படிப் பற்றுகிற மனம் எவ்வளவுக்கு எவ்வளவு உயர்ந்த பண்புடைய ஒன்றைப் பற்றுகின்றதோ அவ்வளவுக்கு அவ்வளவு உயரும்!

டத்தில் உண்டு. இங்கு காகம் இல்லாத படியால் அத்தகைய வழக்கம் இல்லாது போய்விட்டது.

### கிரக தோஷத்துக்குச் சாந்தி

தமிழ் நாட்டிலிருந்து வரும் சோதிடர்கள் சனி தோஷம், செவ்வாய் தோஷம். என்று கூறி அத்தோஷ நிவிர்த்திக்காகச் சாந்தியும் செய்வார்கள்.

சோதிடம் சொன்னதற்கு கொடுத்ததை வாங்குவார்கள். சாந்தி செய்வதற்கு இவ்வளவு கொடுத்தாக வேண்டும் என்று நிறையக் கறந்து விடுவார்கள்.

சாந்தி செய்யப் பணமில்லாதவர்கள் அடியேனிடம் வருவார்கள்.

அவர்களுக்கு "ஓம் நமசிவாய என்ற மந்திரத்தை காலை மாலை நூற்றெட்டு முறையாவது செபம் செய்யுங்கள்" என்று வழிப்படுத்தி விடுவேன்.

அவர்கள் குடும்பமாகவே மந்திர செபம் செய்து கிரக தோஷம் நீங்கப் பெற்றிருக்கிறார்கள்.

இது எப்படி என்று சிலர் கேட்பார்கள்.

சிவபெருமான் ஒருவரே எல்லாருக்கும் எஜமானன், நவக்கிரகங்கள் அவருடைய வேலைக்காரர்கள் வேலைக்காரனைக் கும்பிடுவதிலும் பார்க்க எஜமானைக் கும்பிட்டால் பலன் கூடுதலாக உண்டல்லவா?

கிரக தோஷத்திலும் பார்க்க சோதிடர் சொல்லும் கிரக தோஷம் மக்களைப் பயத்தில் ஆழ்த்தி விடுவதும் உண்டு.

### நான்கு சமயங்களையும் அரசாங்கம் பாதுகாக்கிறது

இந்தோனேசிய அரசாங்கத்தால் ஒப்புக் கொள்ளப்பட்ட சமயங்கள் நான்கு அவை இஸ்லாம், இந்து, பௌத்தம், கிறிஸ்தவம் என்பவை. இந்த நான்கு சமயங்களையும் பேதமின்றிப் பாதுகாக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திலும் ஒவ்வொரு மதத்திற்கும் தனித்தனியான பிரிவுகள் உண்டு. மாகாண அதிபதிக்குக் கீழே அடுத்த பெரிய

---

### உள்ளொளியே பெருக வேண்டும் ★

"அஞ்ஞானம் தன்னை அகல்விக்கு நல்லறிவாம் இறைவன் மெய்ஞ்ஞானமாக மிளிர்கின்ற மெய்ச்சுடர்" என்கிறது சிவபுராணம்.

புறத்தில் இருள் அகற்றும் ஒளியை ஏற்றினாலும் — போற்றினாலும் — அகத்தில் உள்ளொளியை ஏற்றத் தவறுவோமானால் வாழ்வு அர்த்தமற்றது.

"ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கினால், உலப்பிலா ஆனந்தமாய தேனினைச் சுவைக்கலாம்" என்பது மணிவாக்கு.

தலைவராக சமயச் சபைத் தலைவரே இருக்கிறார்.

### பூர்வ குடிகள் இந்துக்களாக மாறுகின்றனர்

வருடந்தோறும் பத்தாயிரம் பேருக்குக் குறையாமல் பூர்வ குடிகள் இந்துக்களாகச் சேர்ந்து கொண்டே இருக்கின்றனர்.

கோயில்களை 'பாரிசாடா' என்னும் சமயச் சபை ஏற்றுக் கொண்ட பின் கரகம், காவடி ஆடுதல், செடில்குத்தி உடல் வருத்தல், முள்ளு மிதியடியில் நடத்தல் போன்ற செயல்களை நிறுத்தி பஜனை, திருமுறை ஓதல், நாம செபம், தியானம் போன்றவற்றுக்குக் கோயில்களில் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். இதனால் ஆலய வழிபாட்டின்போது ஒரு அமைதியைக் காண முடிகிறது.

### பௌத்தசீன ஆலயங்கள் இந்து ஆலயங்களாக மாறுகின்றன

பௌத்த சீனர்கள் இந்துக்களாகிக் கொண்டு வருகின்றனர். அவர்கள் இந்துக்களாக மாறியதோடு தாம் வழிபாடு செய்து வந்த பௌத்த ஆலயங்களையும் இந்து ஆலயங்களாக மாற்றிக் கொண்டனர். இந்து ஆலயங்களுக்கு இந்துப் பெயர்களையே சூட்டினர்.

ஏன் கோயில்களையும் மாற்றி நீங்களும் மாறிக் கொண்டீர்கள் என்று கேட்டபோது ''நாங்கள் வணங்கிய புத்தர் பிரான் இந்து சமயத்தவர்தானே, ஆதலால் நாங்கள் இந்து சமயத்தவராக மாறியதில் என்ன பிழை''? என்று கேட்டார்கள்.

### கோயில் நிர்வாகம் புரோகிதர்களை நியமிக்கிறது

சுமாத்திராவில் இந்து ஸ்தாபனங்களுக்கெல்லாம் தலைமையானதாகவும் வழிகாட்டியாகவும் விளங்குவது மேடான் ஸ்ரீ மாரியம்மன் கோயிலாகும்.

சமய சமூக சம்பந்தமான நிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஸ்ரீ மாரியம்மன்

---

★ **நல்ல காரியம்**

ஆக்க பூர்வமான பணிகளைச் செய்வதற்கு வயதும் முதுமையும் ஒரு தடையா?

''இல்லவே இல்லை'' என்று தமது செயல் மூலம் நிரூபித்து வருகிறார் பண்ணாகம் பண்டிதர் அ. ஆறுமுகம்!

இவரது அயராத முயற்சியால் வட்டுக் கோட்டைத் தொகுதி ''தமிழறிஞர் சரித்திரம்'' என்ற நூல் அண்மையில் வெளி வந்திருக்கிறது.

தமிழ்க் காதலர் அனைவரினதும் பாராட்டுக்குரிய நல்ல காரியம்!

கோயில் வழிகாட்டலையே எப்பொழுதும் பொது மக்கள் எதிர்பார்த்திருப்பர்.

நன்கு படித்தவர்களாகவும், கடவுள் பக்தி உள்ளவர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் உள்ளோரைத் தெரிந்தெடுத்து ஸ்ரீ மாரியம்மன் கோயில் நிர்வாகம் புரோகிதராக நியமிக்கிறது.

இவர்கள் எவ்வித சாதிப் பாகுபாடுமின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள்தான் திருமணக் கிரியைகளையும் அந்திமக் கிரியைகளையும் செய்யும் தகுதியுடையவர்.

## திருமணப் பதிவு கோயில் பொறுப்பு

இந்துக்களுக்குரிய திருமணப் பதிவு விடயத்தை அரசாங்கம் ஸ்ரீ மாரியம்மன் தேவஸ்தானத்திடமே ஒப்படைத்துள்ளது.

மணமக்களிடையே பிரிவினை ஏற்படுமிடத்து அதனையும் தேவஸ்தானமே சமரசப்படுத்தி வைக்கிறது.

தேவஸ்தானத்தின் தீர்வை ஏற்றுக் கொள்ளாதவர்கள் மேலிடத்திற்கு மனுச் செய்யலாம்.

## அகத்தியர் சிலை

ஸ்ரீ லங்காவில் பராக்கிரம மன்னனுடைய சிலை என்று சொல்லிக் கொள்வது போன்றதொரு சிலை இந்தோனேசிய இராச்சியம் முழுவதிலும் காணலாம்.

அது அகத்தியர் சிலையாகும்!

கிழக்கு யாவாவில் அகத்தியர் கோயில் ஒன்று இருக்கிறது. இக்கோயில் 11 ம் நூற்றாண்டுக்கு முன் கட்டப்பட்டதாகும்.

இக்கோயிலில் இருந்த அகத்தியர் சிலை சந்தனக் கட்டையால் செய்யப்பட்டது. பொதிய மலைச் சந்தனக் கட்டையால் செய்யப்பட்டது. பிற்காலத்தில் சிலையில் சிறிது ஊனம் ஏற்பட்டதனால் அச்சிலையை அகற்றிக் கருங்கல்லினால் செதுக்கப்பட்ட சிலை ஒன்று வைத்துள்ளார்கள்.

## இந்தோனேசிய மொழியிலும் இந்துசமய பாடம்

தமிழ்ப் பிள்ளைகளில் சிலர் இந்தோனேசிய மொழியிலேயே இந்து சமய பாடம் கற்கின்றனர். பாலி இந்துக்கள் கற்கும் பாடத்திட்டமே இவர்களுக்கும் உரியதாகும்.

பாலி இந்துக்கள் கற்கும் சமய பாடத்தில் வழிபாட்டு முறையோ பக்தி முறையோ காணப்படுவதில்லை.

இந்து சமய தத்துவங்களுக்கே முதலிடம் கொடுத்திருக்கின்றனர்.

## வேலுப்பிள்ளை வேப்பிலை ஆகிவிட்டது.

தமிழ்ப் பெயர்கள் உச்சரிப்பில் மலாய் மொழியின் உருவத்தை அடைந்து விட்டன. தமிழ்ப் பெயர்கள் வைக்கப்பட்டாலும் உச்சரிப்பில் பலவித மாற்றங்கள். காரணம் தமிழ் உச்சரிப்புத் தெரியா

மையாகும். வீட்டில் தமிழ் பேசும் பழக்கம் இல்லாதபடியால் தமிழ்ச் சொற்களின் உச்சரிப்பின் உருவத்தை அவர்களால் உணர முடிவதில்லை.

லெச்சி என்ற பெயர் இலட்சுமணன் என்ற பெயரின் திரிபாகும். முத்தையா என்று உச்சரிக்கத் தெரியாது: முத்தியா என்றே உச்சரிப்பார்கள். வேலுப்பிள்ளை என்ற பெயரை வேப்பிலை என்று உச்சரிப்பார்கள் திருத்தினாலும் அவர்கள் நாவு திருந்துவதில்லை.

தமிழ் தெரிந்த, தமிழ் பேசுகின்ற அதுவும் செந்தமிழ் பேசுகின்ற ஈழத்திலும் தமிழகத்திலும் தூய தெய்வத்தன்மையான பெயர்கள் மறைந்து, சினிமா நட்சத்திரங்களின் பெயர்களும், நாவல்களில் வரும் கதா பாத்திரங்களின் பெயர்களும் இடம் பெற்றுக் கொண்டு வருகின்றன. சில தமிழ்க் குழந்தைகளின் பெயர்களை, தமிழ் தெரிந்த தமிழர்களாலேயே உச்சரிக்க முடிவதில்லை.

மொழி மூலம்தான் ஒரு இனம் காப்பாற்றப்படுகிறது. மொழியில் ஈடாட்டம் காணப்பட்டால் இனத்திலும் ஈடாட்டம் காணப்படும்.

## ஒன்றரைக் கோடிமக்களும் இந்துக்களே!

பாலி என்பது ஒரு தீவு. அங்கு வாழும் ஒன்றரக்கோடி பேரும் இந்துக்களே! வேற்று மதத்தவர் பார்வையாளர்களாக இருக்கிறார்கள். ஆனால் நிரந்தரமாக இருப்பவர்கள் அத்தனை பேரும் இந்துக்களே! ஆனால் அவர்களுடைய மொழி இந்தோனேசிய மொழியாகும்.

உலகம் முழுவதிலும் பஞ்சமா பாதகங்களை நீக்கி, இந்து தர்மத்தைக் கடைபிடித்து வாழும் ஒரு சமூகம் உண்டென்றால் அது பாலித் தீவிலுள்ள இந்துக்களாகும்

## திரிமூர்த்தி கோயில்

பாலித் தீவின் பெரிய கோயில் திரிமூர்த்தி கோயில் எனப்படும். பல இடங்களிலும் சிறிய அளவில் திரிமூர்த்தி கோயில்கள் உண்டு. வீடுகளிலும் திரிமூர்த்தி கோயில்கள் உண்டு. திரிமூர்த்தி என்பது பிரமா, விஷ்ணு, உருத்திரன் ஆகியோர். மூன்று பெரிய தூண் வடிவில் சிற்பவேலைப்பாடு அமைந்ததாய் இருக்கும். நடுவில் உள்ளது பெரியதாயும் பக்கங்களில் உள்ளவை சற்றே சிறியனவாகவும் இருக்கும். நடுவில் இருப்பது சிவம். இரு பக்கங்களிலும் பிரம்மாவும் விஷ்ணுவுமாகும். எந்தக் கோயில்களுக்குள்ளேயும் சுவாமியின் திருவுருவங்கள் இல்லை.

## அம்புல் தீர்த்தம்

தேவேந்திரன் கோயில் என்பது ஒன்று உண்டு. இக் கோயில் ''கம்ப சிறிங்'' என்ற கிராமத்தில் உள்ளது கோயிலில் உள்ளே ஊற்றெடுக்கும் தண்ணீர் ஓடி வந்து குளம் போல் நிற்கிறது. இக் குளமே 'அம்புல் தீர்த்தம்' என்று அழைக்கப்படுகிறது. இத் தீர்த்தம் பலவித நோய்களை நீக்குவதாக ஐதீகம்.

## சரஸ்வதி தேவிக்குப் பூசை

சாங்கி என்பது ஒரு கிராமம். மரச் சோலைகள் நிரம்பிய காட்

டின் மத்தியில் ஒரு கோயில். இது சரஸ்வதி கோயில் என்று அழைக்கப்படுகிறது. ஒரு நாளைக்கு ஒரு முறை பூசை நிகழும். சரஸ்வதியின் படத்துக்கே பூசை நடைபெறுகிறது. சரஸ்வதி தேவியின் கைகளில் வீணை, ஏடு, செபமாலை, தாமரைப் பூ என்பன இருக்கின்றன.

*சாந்தி பிரம்பனன்*

இது ஒரு பிரமாண்டமான கோயில். மேற்கு ஜாவாவில் உள்ளது. பிரம்மா, சிவன், விஷ்ணு மூவருக்கும் கோயில் உள்ளது.

சாந்தி பிரம்மா கோயில் 20 × 20 × 33 மீ அளவுள்ளது, சாந்தி சிவா 34 × 34 × 47 மீ அளவுள்ளது. சாந்தி விஷ்ணு 20 × 20 × 33 மீ அளவுள்ளது.

இம் மூன்று கோயிலையும் சுற்றிவரப் பரிவார தெய்வங்கள் நிறைய உண்டு,

சாந்தி சிவா கோயிலைச் சுற்றிச் சிவமகாதேவா, சிவ மத குரு, கணேசர், துர்க்கா, மகாதேவி, நந்தீஸ்வரர் என்னும் ஆறு கோயில்கள் உண்டு. இவற்றை சுற்றி மொத்தமாக 240 கோயில்கள் உண்டு

தற்போது அரசாங்கம் பொறுப்பேற்று இக் கோயில்களைப் புனருத்தாரணம் செய்து வருகின்றது.

கோயிற் சுவர்களில் இராமாயணக் கதைகளும், பாரதக் கதைகளும், பாகவதக் கதைகளும், சிவனுடைய திருவிளையாடல்களும் சிற்பமாகவும் சித்திரமாகவும் இடம் பெற்றுள்ளன.

*பாரத, இராமாயணக் கதைகளில் ஈடுபாடு*

இந்தோனேசியாவில் சாதி சமயப் பேதமற்று எல்லாருக்குமே பாரத, இராமாயண, பாகவத கதைகளில் ஈடுபாடு உண்டு.

இக் கதைகளில் வரும் தத்துவங்கள் மக்களின் வாழ்க்கையைப் புனிதப்படுத்துகின்றன.

இந்தோனேசியாவில் தினமும் ஏதாவது ஓரிடத்தில் பாரத, இராமாயணக் கதைகள் பிரவசனமாகவோ நாடகமாகவோ நாட்டிய நாடகமாகவோ நடந்துகொண்டே இருக்கும்.

*மாரியம்மன் கோயில் மகிமை*

மேடான் ஸ்ரீ மாரியம்மன் கோயிலில் வேற்றுச் சமயத்தவரும் வேற்றுச் சமூகத்தவர்களும் வந்து வழிபடுங் காட்சி கண்ணுக்கினிய காட்சியாகும்.

இவர்களது வேண்டுகோளை அம்பாள் ஈடேற்றி வைக்கும் காரணத்தினாலேயே அன்பர்கள் அடிக்கடி வருகின்றனர்.

மேடான் நகரத்தின் மத்தியில் வானளாவ உயர்ந்திருக்கும் கோபுரங்களையுடைய ஸ்ரீ மாரியம்மன் கோயில் நகரத்திற்கே ஒரு ஒப்பற்ற சோபையைக் கொடுத்துக் கொண்டிருக்கிறது.

பிரதான வீதியின் பக்கமாக அமைந்திருக்கும் மதில் சுவரில் பாலிக்காரர் ஒருவர் அழகான சிற்பங்களோடு சித்திரங்களையும் தீட்டியுள்ளார்.

நடராசப் பெருமானின் நடனத் தோற்றம், கண்ணன் தேரில் இருந்தவாறே அர்ச்சுனனுக்குக் கீதா உபதேசம் செய்யும் காட்சி, யோகாசனங்கள் ஆகியவை மிக விசேடமாக அமைந்துள்ளன. ○

மனத்திலிருந்து கனிந்து விழும் சொற்கள் சுவையானவை! அனுபூதியில் கனிந்த சொற்கள் உண்மையில் அமிர்தமே ஆகும்! நூற்றியொரு வயது வரை வாழ்ந்து ஆன்மிகப் பேரொளியாக விளங்கிய காஞ்சிப் பெரியவரின் சொற்கள் உண்மையில் அமிர்தக் கடலேயாகும்! சுவாமிகளின் சொற்கள் எளிமையானவை! ஆனால் அவற்றிக்கு இருக்கும் வேகமும் ஆழமும் இணையேதும் இல்லாதவை! சொற்களின் இனிமையான சேர்க்கையும், அவற்றினூடே மின்னலிடும் கருத்தும் அழகும் உண்மையில் கவிதைச் சொட்டுக்கு நிகரானவை!

# எட்டுக் குணங்கள்

எட்டுக் குணங்கள்.

தயை, சாந்தி, அநஸூயை, சௌசம், அனாயாசம், மங்களம், அகார்ப்பண்யம், அஸ்ருஹா என்பவை அஷ்ட குணங்கள்.

தயை என்பது சர்வபூதங்களிடமும் அன்பு, அருளுடைமை, மனுஷ்ய வாழ்க்கையின் நிறைந்த பலன், பெரிய ஆனந்தம் அன்பு செய்வது தான். அதுதான் அஸ்திவாரம், முதுகெலும்பு.

சாந்தி என்றால் பொறுத்துக் கொள்வது. நமக்கு வியாதி, விபத்து தரித்திரம் முதலானவற்றால் உண்டாகிற கஷ்டங்களைப் பொறுத்துக் கொள்வது ஒன்று; நமக்கு ஒருத்தர் கஷ்டத்தைக் கொடுக்கிற போது அவரையும் மன்னித்து அன்பைக் காட்டுவது இன்னொரு விதப் பொறுமை.



''அநஸூயை' என்பது அத்ரி மகரிஷியின் பத்தினியான மஹா பதிவிரதையின் பெயர் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அஸூயை இல்லாதவள்

அநஸூயை. (அநுஸூயை என்று 'நு' போட்டுச் சொல்வது தப்பு) நம்மைவிட ஒருத்தன் நல்லநிலைமையில் இருந்தால் வயிற்றெரிச்சல்படக் கூடாது. பொறாமையின்மைதான் அநஸூயை.

முதலில் சொன்ன அன்பு எல்லோரிடமும்; இரண்டாவதாகச் சொன்ன பொறுமை தப்புப் பண்ணுகிறவனிடம்; பொறாமையின்மை நம்மை விட மேல் ஸ்தானத்தில் இருக்கிறவனிடம், அவன் நம்மைக் காட்டிலும் யோக்யதையில் குறைந்தவனாக இருந்தாலும்கூட, நமக்கு மேல் ஸ்தானத்துக்குப் போய்விட்டான் என்றால் பொறாமைப்படக் கூடாது.

''பூர்வ ஜன்மாவில் நம்மை விடப் புண்ணியம் பண்ணியிருப்பான். அதனால்தான் பகவான் அவனை உயர்த்தி வைத்திருக்கிறான்'' என்று மனசைப் பக்குவப் படுத்திக் கொள்ள வேண்டும்.

''சௌசம்' என்பது 'சுசி' என்பதை வைத்து ஏற்பட்டது. 'சுசி' என்றால் சுத்தம், ஸ்நானம், மடி வஸ்திரம், ஆகார நிர்ணயம் முதலான ஆசாரங்கள் எல்லாம் ''சௌசம்'' என்பதில் வரும். ''சுத்தம் சுகம் தரும்; சுத்தம் சோறு போடும்'' என்று பாமர ஜனங்களும் சொல்வார்கள். வெளியிலே நன்றாக சுத்தமாக இருக்கிறவனைப் பார்த்தாலே நம் மனசுக்கும் சுத்தமாயிருக்கிறது!

சகல ஜனங்களுக்குமான ஐந்து தர்மங்களை மனு சொல்லுகிற போதும் முதலில் அஹிம்சை, அப்புறம் சத்யம், அப்புறம் பிறர் பொருள்களில் ஆசையின்மை என்ற மூன்றைச் சொல்லி, நாலாவதாக இந்தச் ''சௌசம்'' என்பதையே சொல்கிறார். கடைசியில் புலனடக்கம் என்பதைச் சொல்கிறார்.

''அனாயாஸம்'' என்பது ஆத்ம குணங்களில் அடுத்தது. ஆயாஸத்துக்கு எதிர்ப்பதம் அனாயாஸம். ''லைட்'' டாக இருப்பது என்கிறார்களே அதுதான் அனாயாஸம். ஆயாஸம் இல்லாமல், அதாவது எதையுமே ஒரு சுமையாக எடுத்துக் கொண்டு கஷ்டப்படாமல் ''லைட்'' டாக லேசாக இருப்பது அனாயாஸம். எப்போது பார்த்தாலும் 'உர்' ரென்று இருந்துகொண்டு, வாழ்க்கையில் தனக்கு எல்லாம் கஷ்டம் என்று புலம்பிக் கொண்டு நொந்து கொண்டு இல்லாமல், எதிலும் கடுமையாகச் செய்யாமல்' நிம்மதியோடு லேசாகச் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதாலேயே ஆயாஸப் பட்டுக் கொண்டு செய்வதைவிடப் பல மடங்கு வேலை செய்து விடலாம். பதட்டமில்லாமல் பண்ணுவது அனாயாஸம். பட்பட என்று செய்தால் நம்மையும் நெரித்துக் கொண்டு மற்றவர்களையும் நெரிப்பதுதான் மிஞ்சுமே தவிரக் காரியம் சரியாக ஆகாது. அனாயாஸம் ஒரு பெரிய குணசீலம். அலட்டிக் கொள்ளாமல் இருக்கிற குணம் அனாயாஸம்

**காஞ்சிப் பெரியவர்**

தானும் சிரமப் படாமல் மற்றவர்களையும் சிரமப் படுத்திக் கொண்டிராமல் இருப்பது அனாயாஸம். அநேகக் கர்மானுஷ்டானங்களில் உடம்பால் சிரமப் படத்தான் வேண்டியிருக்கும். இங்கே சிரமப்படக் கூடாது என்பது மனசினால் சிரமப் படாமலிருப்பதைத்தான் குறிக்கும்.

எந்தக் காரியமானாலும் விக்கினங்கள் வரத்தான் செய்யும். இதைப் பார்த்து மனசை Strain பண்ணிக்கொள்ளக் கூடாது.

எல்லாம் பகவான் திட்டப்படி நடக்கிறது என்று மனசிலே பாரமில்லாமல் இருக்க வேண்டும்.

சங்கீத வித்துவான் அனாயாஸமாக தார ஸ்தாயி பிடித்தார் என்றால் என்ன அர்த்தம்?

சிரம சாத்யமானதையே சுலபமாக்கிக் கொண்டு விட்டார் என்று தானே அர்த்தம்?

சிரமமான வாழ்க்கையை அப்படிப் பண்ணிக் கொள்வதுதான் அனாயாஸம்!

''மங்களம்'' என்றால் மங்களந்தான்! ஆனந்தமாக — அதிலேயே ஒரு கம்பீரத்தோடு தூய்மையோடு ஆனந்தமாக இருந்து கொண்டிருப்பதுதான் மங்களம்.

எதற்கெடுத்தாலும் எரிந்து விழுந்து கொண்டோ, மூக்கைச் சிந்திப் போட்டுக் கொண்டோ இல்லாமல், ''ஆஹா'' என்று எப்போதும் சந்தோஷமாக இருக்க வேண்டும்.

இதுதான் லோகத்துக்கு நாம் செய்கிற பெரிய ஒத்தாசை, வேறு ஸர்வீஸ்கள் பண்ணுவதைவிட, நாம் போகிற இடமெல்லாம், நம் மங்களத்தாலேயே ஆனந்தத்தை உண்டாக்கிக் கொண்டிருப்பதுதான் மற்ற ஜீவர்களுக்குப் பெரிய தொண்டு.

'லைட்' டாக, லேசாக எதையும் சாதிப்பது அனாயாஸம். போகிற இடமெல்லாம் நாமே ஒரு 'லைட்' (தீபம்) மாதிரி ஒளியை, ஆனந்தத்தைக் கொடுப்பது ''மங்களம்.''

நாம் ஓர் இடத்துக்குப் போனால் அங்கே இருப்பவர்கள் 'குற்றம் கண்டு பிடிக்கவந்து விட்டான்'' என்று முகத்தைச் சுளிக்கும் படியாக இருக்கக் கூடாது. எங்கே நாம் போனாலும் அங்கே நல்ல திருசான சந்தோஷத்தை விருத்தி பண்ண வேண்டும். நாமும் மங்கள

---

## எது யோகம்?

★ புலன்களின் நாட்டத்தினால் நமது மனம் அமைதியை இழந்து தவிக்கிறது. ஆசைகள் இல்லாத தூய மனத்திலேயே ஆத்மாவின் உண்மை ஒளி விளங்கும். வைராக்யத்தின் மூலம் நமது ஆசைகளை நாம் ஒழிக்க வேண்டும். அப்போதுதான் மனமும் அமைதியடைந்து நாம் ஆத்ம சாட்சாத்காரத்தைப் பெற முடியும். மனத்தில் தோன்றும் எண்ணங்களைக் கட்டுப் படுத்துவதே யோகம்'' என்று பதஞ்சலி யோக சூத்திரம் கூறுகிறது.

கரமாக இருந்து கொண்டு பொங்கும் மங்களம் எங்கும் தங்குமாறு செய்ய வேண்டும்.

"அகார்ப்பண்யம்" என்று அடுத்தது சொன்னேன். கிருபணனின் குண ் கார்ப்பண்யம் அப்படி இல்லாமல் இருப்பது அகார்ப்பண்யம். கிருபணன் என்றால் லோபி. லோபித்தனம், கருமித்தனம் இல்லாமல் தான தர்ம சிந்தையோடு இருப்பதுதான் அகார்ப்பண்யம். மனசார வாரிக் கொடுக்கிற குணம் வேண்டும்.

அர்ச்சுனன் ரொம்பவும் மனம் தளர்ந்து தேர்த் தட்டிலே உட்கார்ந்து "யுத்தம் பண்ண மாட்டேன்" என்று அழுதபோது அவனுக்குக் "கார்ப்பண்ய தோஷம்" ஏற்பட்டதாகக் கீதையிலே சொல்லியிருக்கிறது. அந்த இடத்தில் "தன்னையே ரொம்பவும் தாழ்த்திக் கொண்டு தீனமாகப்போய் விட்டவன்" என்று அர்த்தம்.

அகார்ப்பண்யம் என்றால் இப்படி தீனனாக, நோஞ்சானாகக் கையாலாகாதவனாக இல்லாமல் தீரனாக, நல்ல உத்ஸாக புருஷனாக மனஸ்வியாக இருப்பது என்றாகும்.

"அஸ்ப்ருஹா" என்றால் பற்றின்மை, ஆசையின்மை.

அத்தனை அனர்த்தப் பரம்பரைக்கும் ஆணி வேராக இருப்பது ஆசைதான்.

---

## மிகைப்படுத்தலுக்கு ஆர்வமே காரணம்

மகான்களின் பிறப்பு வளர்ப்பைப் பற்றிச் சாதாரணமாக பலவித கதைகள் கூறப்படுவது வழக்கம். பரம்பரை பரம்பரையாக செவி வழி வரும் செய்திகள் கண்ணும் மூக்கும் வைக்கப்பட்டு உருமாறி விடுவதில் வியப்பொன்றுமில்லை. எல்லையற்ற பக்தியின் காரணமாக, அற்புதங்களும் அதிசயங்களும் நிகழ்ந்திருக்கின்றன என்பதைக் காட்டும் ஆர்வத்தில் ஒவ்வொருவரும் மிகைப்படுத்திக் கொண்டே போவதால், நிகழ்ச்சிகளில் முரண்பாடுகள் தோன்றி விடுகின்றன.

ஆராய்ச்சி நோக்கோடும், பகுத்தறிவோடும் இவ் வரலாறுகளை அணுக விரும்புகிறவர்கள், இம் முரண்பாடுகளைக் கண்டு திகைத்து, உண்மை எது என்று தெரியாமல் குழப்பமடைகிறார்கள்.

புராணக் கதைகளையும், தல புராணங்களையும் நம்பத் தயாராயிருக்கும் பக்தர்கள்கூட. மகான்களின் வாழ்க்கை வரலாற்றை ஆராயும்போது, அதற்குத் தகுந்த ஆதாரம் இருக்கிறதா என்று கேட்கத்தான் செய்வார்கள். அதிலும் முன்னூறு நானூறு ஆண்டுகளுக்குள் வாழ்ந்தவர்களைப் பற்றிய ஆதாரமற்ற செய்திகளை ஏற்றுக்கொள்ள நம் மனம் விரும்பினாலும் நம்முடைய அறிவு ஒப்புக்கொள்ள மறுத்து விடுகிறது.

— பரணீதரன்

ஆனால், அதை அடியோடு வெட்டுவது தான் ரொம்பவும் அசாத்தியமாயிருக்கிறது ஸம்ஸ்காரங்களைப் பண்ணிப் பண்ணி, அவற்றோடு அஷ்ட குணங்களையும் சேர்த்துச் சேர்த்து அப்பியாசம் பண்ணிக் கொண்டு போகும்போது கடைசியில் இந்த ஆசையின்மை பற்றின்மை என்பது பூர்த்தியாக அனுபவத்தில் வருகிறது.

பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு

என்று வள்ளுவர் சொன்னார்.

இப்படி ஈச்வரன் என்ற பற்றற்றானை பற்றிக் கொண்டு மற்றப் பற்றுகளை விட்டு விட்டால் மட்டும் போதாது.

அப்புறம் அந்த ஈச்வரனுடனும் பற்றைக் கத்தரித்து விட வேண்டும் என்று இன்னும் ஒரு படி மேலே போய் விட்டார் திருமூலர்.

ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்

ஈசனோடாயினும் ஆசை அறுமின்கள்

ஆசையைத்தான் தாகம் (வேட்கை) என்று புத்தர் சொன்னார்.

''ஜலம் வேணும் வேணும்' என்று தாகத்தில் பறக்கிற மாதிரி ஆசை வாய்ப்பட்டுப் பறப்பதை திருஷ்ணா'' என்பார்கள்.

பிராகிருதத்தில் இதையே 'தன்ஹா'' என்று புத்தர் சொன்னார்.

ஆசையைப் போக்கடித்துக் கொள்வதுதான் புத்தருடைய முக்கியமான உபதேசம்.

இது அஷ்ட குணங்களில் கடைசி.

முதலில் சொன்ன தயைதான் கிறிஸ்து மதத்துக்கு ஜீவநாடி.

இப்படி ஒவ்வொன்றை ஒவ்வொரு மதத்தில் ரொம்பவும் அழுத்தம் கொடுத்துச் சொன்னாலும் இந்த அஷ்ட குணங்களையுமேதான் கிறிஸ்து, புத்தர், நபி, நானக், ஜொராஸ்தரர், கன்பூசியஸ் இன்னும் என்னென்ன மதங்கள் இருக்குமோ அவை எல்லாவற்றின் ஸ்தாபகர்களும் சொல்லியிருக்கிறார்கள்.

நேராக அவர்கள் இந்த எட்டைச் சொல்லாமலிருந்தாலுங்கூட மனுஷ்யனானவன் இந்தக் குணங்கள் இல்லாமலிருப்பதை எந்த மத ஸ்தாபகரும் ஆதரித்திருக்க மாட்டார் என்பது நிச்சயம் O

('அருள் உரை' 34 வது பிரசுரத்தில்)

---

## உண்மையான வாழ்க்கை

★ யானும் என்ன என்னவோ செய்து உடம்பைக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணினேன், எழுதினேன்; சொன்னேன்.

இப்பொழுதெல்லாம் என் மனம் மாறிவிட்டது.

மற்றவர்களுக்காக வாழ்ந்து செத்துப் போவதில்தான் உண்மையான அமைதி இருக்கிறது. அதுதான் உண்மையான வாழ்க்கையாகும்.

—திரு. வி. க.

'புரட்சிக் கவி' 'புதுயுகக் கவி' என்ற பெருமைக்கு உரித்தானவர் மகாகவி பாரதியார்! பல மொழிகள் அறிந்தவர்: வேதம் தெரிந்தவர்! பாழ்பட்டு நின்ற மக்களை தனது கவிதைகளால் தட்டி எழுப்பி உற்சாகம் ஊட்டியவர்! கவிதைகளைப் போலவே நிறையக் கட்டுரைகளும் எழுதியவர்! என்ன எழுதினாலும் அதில் தனது தனி முத்திரையைப் பதித்து எழுதியவர்! இவருடைய ஆன்மிகப் பார்வை மிக உயர்வானது! இவர் கூறும் கீதைக் கருத்துக்கள் மிகவும் நுட்பமானவை!

# கீதை சொல்வது என்ன?

புத்தியிலே சார்பு எய்தியவன், இங்கு, நற்செய்கை தீச் செய்கை இரண்டையும் துறந்து விடுகிறான்.

ஆதலால் —

யோக நெறியிலே பொருந்துக.

''யோகம் செயல்களிலே திறமையாவது''

கீதை 2 ஆம் அத்தியாயம், 50 ஆம் சுலோகம்

இஃதே கீதையில் பகவான் செய்யும் உபதேசத்துக்கெல்லாம் அடிப்படையாம்!

புத்தியிலே சார்பு எய்தலாவது —

அறிவை முற்றிலும் தெளிவாக மாசு மறுவின்றி வைத்திருத்தல்.

தெளிந்த புத்தியே மேற்படி சுலோகத்திலே புத்தி என்று சொல்லப்படுகிறது.

அறிவைத் தெளிவாக நிலை நிறுத்திக் கொள்ளுதலாவது யாதென்றால் —

கவலை நினைப்புக்களும் அவற்றுக்கு ஆதாரமான பாவ நினைப்புக்களுமின்றி அறிவை இயற்கை நிலைபெறத் திருத்துதல்.

''நீங்கள் குழந்தைகளைப் போல ஆனாலன்றி மோட்ச ராச்சியத்தை எய்த மாட்டீர்கள்''

## மகாகவி பாரதியார்

என்று யேசு கிறிஸ்து சொல்லியதும் இதே கருத்துக் கொண்டேதான்.

அறிவுத் தெளிவைத் தவற விடாதே.

பின்,

ஓயாமல் தொழில் செய்து கொண்டு இரு!

நீ எது செய்தாலும் அது நல்லதாகவே முடியும்.

நீ சும்மா இருந்தாலும், அப்போது உன் மனம் தனக்குத்தான் ஏதேனும் நன்மை செய்துகொண்டே இருக்கும்.

உடம்பினால் செய்யப்படும் தொழில் மாத்திரமே தொழிலன்று.

மனத்தால் செய்யப்படும் தொழிலும் தொழிலேயாம்.

ஜபம் தொழில் இல்லையா? மனனம் தொழில் இல்லையா? சாத்திரங்கள் எல்லாம், கவிதைகள் எல்லாம், நாடகங்கள் எல்லாம், சட்டங்கள் எல்லாம், கதைகள் எல்லாம், காவியங்கள் எல்லாம், தொழில்கள் அல்லவா?

இவை எல்லாம் உடம்பாற் செய்வதின்றி மனத்தாற் செய்யப்படுவன அன்றோ?

அறிவுத் தெளிவைக் கலங்க விடாதே!

அப்பால்,

''யோகம் பண்ணு, எதன் பொருட்டெனில், யோகமே செய்கைகளில் திறமையாவது'' என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்லுகிறார்.

தொழிலுக்குத் தன்னைத் தகுதி உடையவனாகச் செய்வதே யோகம் எனப்படும்!

யோகமாவது சமத்துவம்

''ஸமத்வம் யோக உச்யதே''

அதாவது,

பிறிதொரு பொருளைக் கவனிக்குமிடத்து, அப்போது மனத்தில் எவ்விதமான சஞ்சலமேனும் சலிப்பேனும் பயமேனும் இன்றி, அதை ஆழ்ந்து, மனம் முழுவதையும் அதனுடன் லயப்படுத்திக் கவனிப்பதாகிய பயிற்சி.

நீ ஒரு பொருளுடன் உறவாடும்போது, உன் மனம் முழுவதும் அப் பொருளின் வடிவமாக மாறி விட வேண்டும். அப்போதுதான் அந்தப் பொருளை நீ நன்றாக அறிந்தவனாவாய்.

''யோகஸ்த: குரு கர்மாணீ'' என்று கடவுள் சொல்லுகிறார்.

''யோகத்தில் நின்று தொழில்களைச் செய்'' என!

யோகி தன் அறிவைக் கடவுளின் அறிவுபோலே விசாலப் படுத்திக் கொள்ளுதல் இயலும்.

ஏனென்றால் —

ஊன்றிக் கவனிக்கும் வழக்கம் அவனுக்குத் தெளிவாக அர்த்தமாகி விடுகிறது. ஆதலால் அவனுடைய அறிவு தெய்விகமான விசாலத் தன்மை பெற்று விளங்குகிறது.

அவனுடைய அறிவுக்கு வரம்பே கிடையாது.

எனவே,

அவன் எங்கும் கடவுள் இருப்பதைக் காண்கிறான். ○

# பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின்
# ஞானமொழி

ஜனக மஹாராஜா மாதிரி மிக உயர்ந்த பதவியில் இருந்த போதிலும் மிக எளிமையான வாழ்க்கையை மேற்கொண்டு மக்களுக்கு முன்னுதாரணமாக வாழ்ந்தவர் ராஜாஜி! அரசியலில் மிக உயர்ந்த பதவிகளை வகித்தது போலவே தமிழ் எழுத்துலகிலும் சக்கரவர்த்தியாக விளங்கியவர்! எந்த விஷயத்தையும் தமிழில் சொல்ல முடியும் என்பதைச் செயல்படுத்திக் காட்டிய முன்னோடி! ஆழ்ந்த புலமையும் கூரிய மதி நுட்பமும் தெளிவுடன் கூடிய சீரிய சிந்தனையும் வாய்க்கப் பெற்றவர்! எளிமையும் தெளிவும் கருத்தின் ஆழமும் இவர் எழுத்தின் சிறப்பான அம்சங்கள்! ''பகவான் ராமகிருஷ்ணரின் ஞானமொழி'' என்ற நூலில் பரமஹம்ஸரின் ஞானமொழிகளை மிகவும் இயல்பான நடையில் தந்திருக்கிறார்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்கள் உபநிஷத்துக்குச் சமானம் என்றால் மிகையாகாது.

பழைய காலத்து ரிஷிகளைப் போன்ற தபோதனர் ஒருவர் நம்முடைய காலத்தில் அவதரித்தார். அவரே ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

அவர் நூல் ஏதும் எழுதவில்லை; பிரசங்கமும் செய்யவில்லை; சுத்த சந்நியாச வாழ்க்கை வாழ்ந்து மறைந்தார். பக்தியுடன் பக்கத்தில் உட்கார்ந்து கேட்ட சீடர்களுடன் பேசிய பேச்சே அவருடைய உபதேசம். அப்படி அவர் பேசியதைக் கேட்ட சீடர்கள் பிறகு அந்த உபதேசங்களை எழுதி வைத்திருக்கிறார்கள்.


படித்தவர்களும் நன்றாக எழுதத் தெரிந்தவர்களும் மிக நல்ல வியாசங்களையும் உபதேசங்களையும் எழுத முடியும். அம் மாதிரி பலர் எழுதியும் வருகிறார்கள்.

ஆனால் அவற்றுக்கு உண்மையான வேகம் இல்லை.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் உள்ளத்திலும், வெளி உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களிலும் பகவானைக் கண்ட மகான்.

நாம் ஒருவரையொருவர் பார்க்கும்போது எவ்வளவு நிச்சயமும் உறுதியும் நிறைந்த உணர்வோடு பார்க்கிறோமோ, அவ்வாறு ராமகிருஷ்ணர் எல்லாப் பொருள்களிலும் பகவானைக் கண்டார்; இத்

**ராஜாஜி**



தகைய அற்புத ஞானிகள் பல நாடுகளில் அவ்வப்போது அவதரித்திருக்கிறார்கள்.

தெய்வீக வாழ்க்கை வாழ்ந்த மக்களின் பேச்சுக்கே ஒரு தனியான வேகம் உண்டு. அவர்களுடைய உபதேச மொழிகளுக்கு உள்ள சக்தி வெறும் படிப்பும் அறிவும் படைத்தவர்களின் தருமோபதேசத்துக்கு இருப்பதில்லை. மகரிஷிகள் பேசும்போது அவர்களுடைய வாழ்க்கை முழுவதும் பேசுகிறது.

அறிவு மட்டுமல்ல, மீமாம்ச வாதங்களும் விமரிசனங்களும் எவ்வளவு அழகாகவும் பொருட் செறிவு கொண்டனவாகவும் இருந்தாலும் ஆண்டவன் அருள் பெற்ற மகான்களின் சம்பாஷணைகளில் காணும் வேகத்துக்கு ஈடாகாது.

நம்முடைய சமூகம் சுதந்திர வாழ்க்கை அடைந்து விட்டது. சுதந்திரத்துடன் சுகமும் பெற வேண்டுமானால் மக்கள் அறவழியில் நிற்க வேண்டும்; நின்றால் சுகமும் நிகரற்ற புகழும் பெறுவோம்.

"கடவுளாவது! சாமியாவது!" என்று பலர் இந் நாட்களில் தைரியமாகப் பேசுகிறார்கள்.

இது நம்முடைய துர்ப்பாக்கியம்.

நாம் காணும் உலகமும் அற்புதப் பொருள்களும் வேகங்களும் ஒன்றினின்று ஒன்று உண்டாவதைக் காண்கிறோம். எல்லாம் நியதியின்படி நடைபெற்றும் சுழன்றும் வருகின்றன.

நியதி தானாக உண்டாகிவிடுமா?

அனைத்துக்கும் காரணமான ஒரு வித்து இல்லாமல் இவ்வளவு உண்டாவதற்கில்லை,

சூனியத்தினின்றும் பொருளோ வேகமோ நியதியோ உண்டாகாது அல்லவா?

நாம் கிரகித்துக் கொண்டு விமரிசனம் செய்யக் கூடாத தன்மை படைத்த ஒரு காரணம் இருந்தே தீர வேண்டும்.

அதுவே பரம்பொருள்.

நியதி இயற்கையாகவே இருக்கிறது. அதற்குக் கடவுள் வேண்டியதில்லை என்று கடவுளுக்குப் பதிலாக இயற்கையைக் கொண்டாடுவதில் சாரம் ஒன்றுமில்லை.

கண்ணுக்குக் காணப்படவில்லை என்பது கடவுள் இல்லை என்பதற்கு ஒரு காரணமாகுமா? இரவில் நட்சத்திரங்கள் திரள் திரளாகக் காணப்படுகின்றன. பகலில் எல்லாம் மறைந்து போகின்றன. கண்களைக் கொண்டு காணாத

பொருள்கள் இல்லவே இல்லை யென்று சாதிக்க முடியுமா?

நம்முடைய சிறிய வாழ்க்கையில் கடவுளைக் காணவில்லை என்கிற காரணத்தினால் கடவுள் இல்லை, கடவுளுக்கு அவசியமும் இல்லை என்று சாதிக்க வேண்டாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் ஒரு நாள் சொன்னார்: "பட்டணத்துக்கு ஒருவன் வந்து இறங்கினதும் முதலில் ஒரு இடம் தேடி மூட்டை முடிச்சுக்களை வைத்து விட்டுப் பிறகு ஊர் பார்க்கப் போகிறான். பகலெல்லாம் சுற்றித் திரிந்துவிட்டு இரவு வந்ததும் தான் ஏற்படுத்திக் கொண்ட விடுதிக்குப் போய்ப் படுக்கிறான். இப்படி முன்னாலேயே தங்குவதற்கு ஓர் இடம் ஏற்படுத்திக் கொண்டிரா விட்டால், பகலெல்லாம் வேடிக்கையாகக் கழித்து விட்டு, இரவில் தங்க இடமின்றி மிகவும் கஷ்டப்படுவான். உலகெல்லாம் சுற்றி அலையும் உள்ளத்துக்கு ஒரு தங்குமிடம் கடவுள். அந்த விடுதியைப் பத்திரப் படுத்திக்கொள்வது சேமம். இல்லாவிடில் சந்தோஷமும் அமைதியும் கெட்டுத் துக்கப்படுவோம். மகனே! வாழ்க்கையில் சந்தோஷம் முடிந்து அந்தகாரம் மூடிக்கொள்ளும் காலம் வரும். அப்போது நிம்மதியைக் காண ஒரு புகலிடம் வேண்டும். கடவுளாகிய விடுதியின் அவசியத்தை உணர்வோமாக."

குடிப்பதற்கு தண்ணீர் மொள்ளும்போது குளத்தினின்று லேசாக மேலேயுள்ள தெளிந்த தண்ணீரை எடுத்துக் கொள்ள வேண்டுமே ஒழிய, சேற்றை கலக்கித் தண்ணீரைக் கெடுத்துக்கொள்ளக் கூடாது. உள்ளம் தூய நிலையை அடைந்து கரும வாழ்க்கை வாழ விரும்பினால், பக்தியை உறுதியாகக் கொண்டு தியானமும் உபாசனையும் மெள்ள நடத்திக்கொண்டு போக வேண்டும். சாஸ்திரப் பிரவசனத்திலும் மீமாம்சங்களிலும் சமய தத்துவ வாதங்களிலும் காலம் கழித்து மூளையைக் குழப்பிக் கொள்ள வேண்டாம். நம்முடைய சிற்றறிவு சிறு குட்டைத் தண்ணீரைப் போன்றது. ரொம்பக் கலக்கி விட்டால் சேறுதான் மேலே வரும்.

தயிருக்குள் வெண்ணெய் உண்டு என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் தயிரைக் கடைந்தால் தான் வெண்ணெய் வருமே ஒழிய, "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" "தயிரில் வெண்ணெய் இருக்கிறது" என்று எவ்வளவு கத்தினாலும் வெண்ணெய் வராது.

பரம்பொருளைக் காண வேண்டுமானால் பக்தியுடன் உள்ளத்தில் விருப்பத்தைக் கடைய வேண்டும்.

"பரமாத்மா" என்றும் ஜீவாத்மா" என்றும் தத்துவம் பேசிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது.

தாயைக் காணாத குழந்தை தாயைக் காண விரும்பி வருந்துவதைப்போல் ஆண்டவனை அடைய உள்ளத்தில் உருக வேண்டும்.

O

(இன்னும் வரும்)



# திருமுருக கிருபானந்த வாரியார் அமுத மொழிகள்

## யார் பெரியவன்?

வயதையும் வளர்ச்சியையும் வைத்து ஒருவனைச் சிறியவனாகவோ பெரியவனாகவோ மதிப்பதை விட அவன் வாழும் முறையை வைத்து மதிப்பதே நல்லது. தனக்கென்று வாழ்பவன் சிறியவன். பிறர்க்கென்று வாழ்பவன் பெரியவன்.

## பகை கூடாது!

பகை மனிதனுக்குப் பெரும் கேடு தரும். தனக்குச் சமானமானவர்களேயன்றி, தனக்குத் தாழ்ந்தவருடைய பகையும் தீமை செய்யும். யானை வலிமையான விலங்கு. தவளை கிணற்றிலேயுள்ள சிறிய பிராணி. யானை கிணற்றில் தன் நிழலைப் பார்க்க வேண்டும் என்று செல்லும் போதெல்லாம் தவளை நீரைச் சிறிது அசைத்து விடும். அதனால் யானைக்குத் தன் நிழலைக் காணும் வாய்ப்பு உண்டாகாது.


## பெரிய இன்பம்!

துன்பங்களுக்கெல்லாம் பெரிய துன்பம் அறிவில்லாதவர்களோடு பழகுவது. பெரிய இன்பம் அறிஞர்களோடு பழகுவது.

## வழிபாடு எப்படி?

கடவுளை வழிபடுவதில் இருவகை உண்டு. ஒன்று அன்பு வழிபாடு. இன்னொன்று ஆசை வழிபாடு. அன்பு வழிபாடு கடவுளைத் தொழும் போது "எனக்கு அது வேண்டும், எனக்கு இது வேண்டும்" என்று கேட்காது. ஆசை வழிபாடே அவ்வாறெல்லாம் கேட்கும்! அன்பு வழிபாடே செய்யத் தக்கது!

சமய மஞ்சரி. பங்குனி 1995. அச்சிடுவித்து வெளியிட்ட ஆசிரியர்: சு. குமாரசாமி. பொன்னாலை, சுளிபுரம். அச்சு: அனந்தா அச்சகம், யாழ்.


பொன்னாலை ஸ்ரீ வரதராசப் பெருமாள் தேவஸ்தானம்
ஞானம்
அனந்தசயனம்